பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 273

புதன்கிழமை
27 ஒகஸ்ட் 2025

ஆவணி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## குருதிவாந்தி எடுத்த நபரொருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27
குருதிவாந்தி எடுத்த குடும்பத்தலைவர் ஒருவர், மேலதிக சிகிச்சையின் போது நேற்று 15

# ரணிலுக்குப் பிணை!



கொழும்பு, ஓகஸ்ட் 27

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றால் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். 15

## ரணிலைக் காப்பாற்றுவதற்கு தலையிட வேண்டும் ட்ரம்ப்!

போராட்டக்காரர்கள் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 27
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் இருந்து, முன்னாள் ஜனாதிபதி ரணிலைக் காப்பாற்றுவதற்காக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலையிட வேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர். 15

## சட்டத்துக்கு அப்பாற்பட்டு எவரும் நாட்டில் இல்லை!

ஜனாதிபதி அநுர உறுதி

கொழும்பு, ஓக. 27
யார் குற்றம் இழைத்தாலும் அவர்களுக்கு எதிரான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதில் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்று எவரும் இல்லை என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். 15

## மருத்துவக் காரணங்களாலேயே ரணிலுக்குக் கிட்டியது பிணை!

300க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலை

கொழும்பு, ஓக. 27
ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டாலும், மருத்துவக் காரணங்களாலேயே இந்தப் பிணை சாத்தியமானது என்று தெரியவருகின்றது.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ரணில் சிகிச்சை பெற்றுவருகின்றார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்து 15



## தீவகப் படுகொலைகள்; அஞ்சலி உணர்வுபூர்வம்

யாழ்ப்பாணம், ஓக. 27
யாழ்ப்பாணம் தீவகப் பகுதிகளில் 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொல்லப்பட்டோரின் 35ஆவது அஞ்சலி நிகழ்வு மண்டைதீவில் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. 15

பொன்னாலை

## வரதராஜப் பெருமாளுக்கு நாளை கொடியேற்றம்!

யாழ்ப்பாணம், ஓக. 27
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் வருடாந்த 15



முச்சந்தி முரளி

'அரசியல்வாதியளுக்கு பிணை பிந்தாமல் பிணக்கில்லாமல் கிடைக்கிறது வழமைதான் கண்டியளோ'

## நெல்லியடியில் திருட்டு; 10 சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 27
நெல்லியடியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பெருந்தொகை பணத் திருட்டுடன் தொடர்புடைய 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நெல்லியடியில் வெளிநாட்டில் 15

## சுண்டிக்குளம் கடற்கரையில் படகு கவிழ்ந்து மீனவர் பலி

யாழ்ப்பாணம், ஓக. 27
வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கடற்கரையில், சீரற்ற காலநிலை காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

## ஆடையைப் போன்ற துணி செம்மணியில் அடையாளம்



யாழ்ப்பாணம், ஓக. 27
செம்மணிப் புதைகுழியில் இருந்து ஆடையையொத்த துணியொன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. 15

## செம்மணி மனிதப் புதைகுழியில் மேலும் 16 என்புத்தொகுதிகள்!

யாழ்ப்பாணம், ஓக. 27
அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியின் மீதான நேற்றைய அகழ்வுப் பணிகளின்போது, மேலும் 16 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் பகுதி 15



அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

பலம் வாய்ந்த கட்டுமானத்திற்கு - அசோக் TMT

ashok STEEL
நீடித்த வலிமை

மத்திய மாகாணம் - 0773825832
வட மேல் மாகாணம் - 0773455128
மேல் / தென் மாகாணம் - 0766773659
வடக்கு மாகாணம் - 0773781397
உடனடி அழைப்புகள் - 011 7388940-3

ஒரு மெட்ரிக் டொன் இற்கு ரூ. 232,000 + VAT

SLS 375

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் |
|---|---|---|---|
| திகதி 26.08.2025 | திகதி 26.08.2025 | திகதி 26.08.2025 | திகதி 26.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4175 | சீட்டிழுப்பு இலக்கம் 1242 | சீட்டிழுப்பு இலக்கம் 0201 | சீட்டிழுப்பு இலக்கம் 2281 |
| ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கினம் கன்னி | ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து P |
| | | | சுப்பர் இலக்கம் 01 |
| வெற்றி இலக்கங்கள் 51 57 73 79 | வெற்றி இலக்கங்கள் 27 32 45 56 | வெற்றி இலக்கங்கள் 5 5 6 9 | வெற்றி இலக்கங்கள் 04 64 65 70 |
| விசேட எழுத்து I | | | |

| மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|
| திகதி 26.08.2025 | திகதி 26.08.2025 | திகதி 26.08.2025 | திகதி 26.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 5933 | சீட்டிழுப்பு இலக்கம் 1963 | சீட்டிழுப்பு இலக்கம் 0508 | சீட்டிழுப்பு இலக்கம் 0049 |
| ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கினம் மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் 6 7 7 5 2 8 | வெற்றி இலக்கங்கள் 21 48 58 74 | வெற்றி இலக்கங்கள் 7 5 2 8 | வெற்றி இலக்கங்கள் 12 16 48 52 |
| | விசேட எழுத்து A | | |

# சர்வதிகாரத்தைத் தொடர்ந்தால் எதிரணிகளின் போர் தீவிரமாகும்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எச்சரிக்கை

**கொழும்பு, ஓக.27**

**தேசிய மக்கள் சக்தி தனது சர்வதிகாரத்தைக் கைவிடாவிட்டால், எதிரணிகளின் கூட்டு அரசியல் போர் மேலும் வலுவடையும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எச்சரித்துள்ளது.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்ததாவது:-

இலங்கையில் பல கட்சிகள் இருக்கின்றன. இவ்வாறு கட்சிகள் இருந்தால்தான் ஜனநாயகம் வலுவடையும். ஆளுங்கட்சி இழைக்கும் தவறுகளைச் சுட்டிக் காட்டும் உரிமை எதிரணிகளுக்குஉள்ளது. இலங்கையை வடகொரியா போன்று ஆக்குவதற்கு இடமளிக்க முடியாது.

அனைத்து எதிரணிகளும் ஒரு மேடைக்கு வந்துள்ளன. அதனால் இந்த அரசாங்கம் தான் கூறுவது மட்டுமே சரி என்ற நினைப்பில் சர்வாதிகாரமாக செயற்படக்கூடாது. அவ்வாறு செயற்பட முற்பட்டால் அதற்கு எதிராக எதிரணிகளின் கூட்டு நடவடிக்கை தொடரும்.

நாம் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முற்படவில்லை. காலை வாரவும் போவதில்லை. அதேபோல எமது அரசியல் பயணத்தை முடக்குவதற்கும் இடமளிக்கப் போவதில்லை - என்றார். (எ-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 26.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் 0641 |
| ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கம் 2 4 9 4 2 4 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 26.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2907 | ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கம் 30 37 48 65 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 26.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கம் 18 31 35 47 | வெற்றி வாரம் 5068 |

| SASIRI | |
|---|---|
| திகதி 26.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் 0756 | வெற்றி இலக்கம் 21 29 35 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 26.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் 16 32 38 52 | சீட்டிழுப்பு வாரம் 4619 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 26.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து O | சுப்பர் இலக்கம் 24 | வெற்றி இலக்கம் 15 47 58 75 | வெற்றி வாரம் 2083 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 26.08.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கம் 24 31 44 48 | வெற்றி வாரம் 2733 |

# எம்.பி.யாகும் திட்டம் ரணிலிடம் இல்லை!

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.27

தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வருவதற்குரிய திட்டம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தரான நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ரவி கருணாநாயக்க, பைசர் முஸ்தபா ஆகிய தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் பதவி விலகி, ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடமளிக்கவுள்ளனர் எனவும், ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாடாளுமன்றம் வருவார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுதொடர்பில் கேட்டபோதே நவீன் திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விவகாரம் பற்றி எதிரணிகளுக்கிடையில் கலந்துரையாடப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்கதான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பிரதான அச்சுறுத்தல். அதனால்தான் அவர் இலக்குவைக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

# பொது ஒழுங்கைப் பராமரிக்க பொலிஸாருக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஓக.27

கொழும்பில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் பொது ஒழுங்கைப் பராமரிக்கவும், எந்த வித இடையூறுகளைத் தடுக்கவும் நகரத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏதேனும் வன்முறை ஏற்பட்டாலோ அல்லது சட்டத்தை மீறும் நபர்களுக்கு எதிராகவோ சட்ட நடவடிக்கை எடுக்கத் தெளிவான அறிவுறுத்தல்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றத்தைச் சுற்றியுள்ள பகுதியில் சிறப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக எந்தவொரு அமைதியின்மைக்கும் விரைவாகப் பதிலளிக்க கலகத் தடுப்புப் படைகள் மற்றும் கூடுதல் பொலிஸ் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




# மாத்தறையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஓக.27

மாத்தறையில் கடற்கரைப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் உரிமையாளரைக் குறிவைத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உணவகத்தின் உரிமையாளர் காயமின்றித் தப்பியுள்ளார்.

மாத்தறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



# எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவை விமர்சிக்கும் தகுதி அரசுக்கு இல்லை

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஓக.27

உள்ளூராட்சிச்சபைகளில் ஆட்சியமைப்பதற்காகப் பிள்ளையானின் கட்சியுடன் கூட்டணி அமைத்த தேசிய மக்கள் சக்திக்கு எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவை விமர்சிப்பதற்குத் தகுதியில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இது ரணில் விக்கிரமசிங்க என்ற தனிநபருக்கான போராட்டம் இல்லை. மாறாக ஜனநாயகம் ஒழிக்கப்பட்டு நாடு அராஜக நிலைக்குச் செல்வதை தடுப்பதற்கான போராட்டமாகும். சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து ஏற்பாடுசெய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்கத்துக்குப் பெரிய வலியைக் கொடுத்திருக்கிறது. நாம் தற்போது ஒன்றிணைந்துள்ளமையை விமர்சிக்கும் தகுதி அரசாங்கத்துக்கு இல்லை.

அரசாங்கத்தால் நாட்டின் ஜனநாயகம் தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள அச்சுறுத்தல் நிலைமையைச் சரிசெய்ய வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும். அரசமைப்பு ஏகாதிபத்தியமயப்பட்டுள்ளதோடு, பொலிஸ் முற்றுமுழுதாக அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் பழிவாங்கல்களுக்காக நீதித்துறையில் தலையிட்டு அழுத்தம் பிரயோகிப்பதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான காரணிகளைத் தடுக்கும் வகையிலேயே எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசின் அடக்குமுறைக்கு அடிபணியப்போவதில்லை

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.27**

**அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு அடிபணியப்போவதில்லை. ஜனநாயகத்தை வேட்டையாடுவதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகள் நிச்சயம் தோற்கடிக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூளுரைத்துள்ளார்.**

கொழும்பு தேசிய மருத் துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று மூன்றாவது நாளாகவும் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கத்தின் அச்சுறுத்தல் மற்றும் அடக்குமுறைகளுக்கு நாம் அடிபணியப்போவதில்லை. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயார். ஜனநாயகத்தை தோற்கடிப்பதற்கான வேட்டையைத் தோற்கடிப்பதற்கு நாம் தயார். அதற்காக மக்கள் அணிதிரள வேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எதிரணித் தரப்பில் இருந்து வழங்கக் கூடிய அனைத்து ஒத்துழைப்புகளையும் நாம் வழங்குவோம். நீதிமன்றத்தின் சுயாதீனத்துக்காக என்றும் நாம் முன்னிலையாவோம் - என்றார். (எ-44)

# பிரசன்ன ரணவீர மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக.27

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

கிரிபத்கொடப் பகுதியில் நடந்த காணி மோசடி சம்பவம் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மஹர நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-இ)

# உடைமையில் ஹெரோய்ன்; சுன்னாகத்தில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக.27

சுன்னாகத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் தனது காரில் 2 கிராம் ஹெரோய்னை வைத்திருந்தவேளை கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-27)

# ஒழுக்கமான சாரதிகளை ஊக்கப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஓக.27

ஒழுக்கமானமுறையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தவேண்டும் என சபாநாயகர் விடுத்த கோரிக்கையை நடைமுறைப்படுத்தத் தயார் என்று பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய அண்மையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நாடாளுமன்றத்தில் சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. வீதி விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (எ-இ)





# சுங்கத்துக்கு புதிய பணிப்பாளர்

கொழும்பு, ஓக.27

சுங்கத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக சீவலி அருக்கொட நேற்றுச் செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் 45 ஆவது சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகமாகப் பதவியேற்கிறார். சீவலி அருக்கோட சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## மருத்துவ உபகரணங்கள் கைமாறல்

# கிளிநொச்சி மருத்துவமனையில் வெள்ளியன்று கவனவீர்ப்பு!

கிளிநொச்சி, ஓக.27

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலுள்ள பெண் நோயியல் மற்றும் சிறப்பு மகப்பேற்றுப் பிரிவு இயங்காதநிலையை காரணம் காட்டி இங்குள்ள மருத்துவ உபகரணங்களை வேறு இடங்களுக்கு நகர்த்தும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனை முன்றலில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. நவீன மருத்துவ சாதனங்களை வேறு இடங்களுக்கு நகர்த்துவதைத் தடுப்பதுடன் குறைந்தளவு தாதியர்களையாவது நியமித்து மருத்துவமனையை இயங்குநிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தி இனமத அரசியல் வேறுபாடுகளைத் தவிர்த்து சகலரும் அணிதிரண்டு ஓரணியில் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவேண்டும் எனப் போராட்டக்காரர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-159)

# எரிஞ்ச கட்சியும் எரியாத கட்சியும்

**காமன் கூத்து எண்ட பழைய கால கூத்தில சிவபெருமானின்ர தவத்தைக் கலைக்க, மன்மதன் அம்பு விடுவான். அதால சிவபெருமானுக்குச் சினம் வந்து தன்ர நெற்றிக் கண்ணைத் திறந்து அவனை எரிச்சுப் போடுவார். அதை வைச்சு காமன் கூத்தில 'எரிஞ்ச கட்சி', 'எரியாத கட்சி' எண்டு ரண்டு பிரிவா நிண்டு போட்டிக்குப் பாட்டுப் பாடுவினம். ரண்டு தரப்பும் ஏட்டிக்குப் போட்டியா, தங்கட வாதம் தான் சரியெண்டு ஆளையாள் அடிக்கிற மாதிரி தோரணையோட மாறி மாறி பாட்டுப்பாட கேக்கிறவைக்கும் இதமா இருக்கும்.இப்பிடி எரிஞ்ச கட்சி, எரியாத கட்சி மாதிரி யாழ்ப்பாணம் வடமராட்சியில உள்ள பேமஸான பள்ளிக்கூடம் ஒண்டில ரண்டுபிரிவா நிண்டு சிலர் முட்டி மோதுறதால 14 பிள்ளையள் பள்ளிக்கூடம் போகாமல், படிப்பும் இல்லாமல் நடுத்தெருவில நிக்கவேண்டிய நிலை.**

**அந்தப் பள்ளிக்கூடத்தில ஆறாம் ஆண்டிலதான் புதுப் பிள்ளையளைச் சேர்க்கிறவை. ஸ்கொலர்ஷிப் புள்ளியளை வைச்சு, இந்தப் பள்ளிக்கூட அட்மிஷனுக்கெண்டு அரசாங்கம் தனியா வெட்டுப்புள்ளி அறிவிக்கும். அதின்படிதான் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு பிள்ளையளைப் புதிசாச் சேர்க்கிறவை. அப்பிடிச் சேர்க்கிற பிள்ளையள் வேற பள்ளிக்கூடமோ, வெளிநாடோ போனால்வாற இடைவெளிக்கு அதே வெட்டுப்புள்ளியில அடுத்தடுத்த நிலையில இருக்கிறவையை பிறகு வாற காலங்களில சேர்ப்பினம். இதுதான் அந்தப் பள்ளிக்கூட நடைமுறை. ஆனால் பள்ளிக்கூடங்களுக்கு இப்பிடி இடையில பிள்ளையளைச் சேர்க்கிறதுக்கெண்டு ஒரு சேக்கிலர் (சுற்றுநிருபம்) இருந்தாலும், அதின்படி இஞ்ச பிள்ளையளை இதுநாள்வரை சேர்த்ததில்லை. ஆனால் இந்தமுறை என்னென்னவோ காரணங்களை மனதில வைச்சு, அந்த 'சேக்கிலரின்'படி புதுசாப் பிள்ளையளைச் சேர்க்கிறதுக்காக பள்ளிக்கூட நோட்டீஸ் போர்ட்டிலையும், பள்ளிக்கூடத்தின்ர வெப்சைட்டிலையும் விளம்பரம் செய்திருக்கினம். அதைப் பார்த்து அம்பது பேருக்கும் மேல அப்ளிகேசன் போட்டிருக்கினம். அவையை பள்ளிக்கூடத்துக்கு கூப்பிட்டு, இன்ரர்வியூ வைச்சு, பதினேழு பேரை செலக்ட் பண்ணியிருக்கினம். ஆனால் அவைக்கு அட்மிசன் குடுக்காமல் கனநாள் இழுத்தடிச்சிருக்கினம். பிறகு எம்.பி.மாரிட்ட முறைப்பாடு செய்த பிறகுதான் ஒருமாதிரி "மூண்டாம் தவணை தொடக்கநாளான திங்கட்கி ழமை பிள்ளையளைக் கொண்டந்து சேருங்கோ" எண்டு செலக்ட் பண்ணுப்பட்ட பிள்ளையளின்ர பெற்றாருக்கு கடிதம் அனுப்புப்பட்டிருக்கு.**

**அதைப் பார்த்துட்டு பிள்ளையளுக்கும், பெற்றாருக்கும் "பேமஸான பள்ளிக்கூடத்தில படிக்க சான்ஸ் கிடைச்சிருக்கு" எண்டு கடும் புளுகம். அந்தப் புளுகத்தோட இவ்வளவுநாளும் படிச்ச பள்ளிக்கூடத்தில இருந்து விடுகைப்பத்திரத்தை (லீவிங் சேர்ட்டிபிக்கெட்) வாங்கிக் கொண்டு பெற்றார் தங்கட பிள்ளையளோட அந்தப் பெரிய பள்ளிக்கூடத்துக்குப் போனால், அங்க அவைக்கு ஒரு கடிதத்தை பிரின்சிபல் நீட்டியிருக்கிறார். பெற்றாரும் அதை வடிவா வாங்கிப்பார்த்தால் "புதிய அனுமதிகள் ஆளுநரின் உத்தரவின் பேரில் ஒத்திவைக்கப்பட்டுள்ளன" எண்டு அதில எழுதப்பட்டிருக்கு. அதைப் பார்த்ததும் பெற்றாருக்கும் பிள்ளையளுக்கும் அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போட்டுது. "ஏன் இப்பிடி பிள்ளையளைச் சேர்க்கச் சொல்லிப்போட்டு இப்ப அதைக் கான்சல் பண்ணி இருக்கிறீங்கள்?" எண்டு பெற்றார் கேக்க, "ஆளுநர் ஓர்டர் போட்டிருக்கிறார். அதை நாங்கள் மீறேலை" எண்டு பள்ளிக்கூட நிர்வாகம் பதில் சொல்லி இருக்கு. ஏன் அப்பிடி ஆளுநர் உத்தரவு போட்டவர்? அந்தப் பதினேழு பிள்ளையளின்ர நிலையும் என்ன? எண்டெல்லாம் ஒருக்கா வடிவா நாளைக்குப் பட்சி சொல்லும்.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் முக்கியமான பொறுப்பு ஒன்றுக்கு உங்கள் பெயர் பரிந்துரைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனாலும், வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். எதிரிகளால் மறைமுகத் தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கை தேவை. கணவன் மனைவிக் கிடையே இருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். பிற்பகலுக்குமேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். மாலையில் உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அதிகாரிகளின் பாராட்டுகள் மனதுக்கு உற்சாகம் தரும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படக்கூடும். ஆனால், குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பார்கள். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம்.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படும். வீண் செலவுகளால் கையிருப்புக்கரையும். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும்.


**மகரம்:** மனதில் உற்சாகம் உண்டாகும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. மாலையில் வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**மீனம்:** உற்சாகமான நாள். வாழ்க்கைத்துணை வழியில் சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் தேவை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தில் மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

# பிறந்த எண் பலன்கள்

ஜோதிட ரீதியாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தந்த எண்ணிற்கேற்ப அவரவரின் இயல்புகளும் அமைந்திருக்கும். ஒன்றாம் எண்ணிலிருந்து 31ஆம் எண்வரை எந்த எண்ணில் பிறந்திருந்தாலும் அதன் கூட்டுத்தொகையானது ஒன்றிலிருந்து 9 வரையே இருக்கும்.




ஒன்பது எண்களிலும் இயற்கையிலேயே அதிர்ஷ்டசாலிகளான 6ஆம் எண்காரர்களைப் பற்றிப் பார்ப்போம். இந்த உலகத்தைப் பற்றி மட்டுமே நினைப்பவர்கள் இவர்கள்தான். பூர்வ ஜென்மம், அடுத்த ஜென்மம் போன்றவற்றில் அதிகம் நம்பிக்கையில்லாதவர்கள். அது மட்டுமல்ல அப்படிப் பேசுபவர்களைக் கண்டால் கிண்டலும், குதர்க்கமும் செய்வார்கள்.

இன்பம், பணம், சுகமான அனுபவங்கள் நோக்கிலே இவர்கள் ஓடுவார்கள். சுயநலம் மிகுந்தவர்கள் இவர்கள்தான். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழில் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். நீடித்த இளமை இவர்களது வரப்பிரசாதமாகும். மன்மதர்களின் மைந்தர்கள் இவர்களே. பணவிஷயத்தில் இவர்களே மிகவும் அதிர்ஷ்டமானவர்கள். இவர்களே குபேரனின் மைந்தர்கள்! எவர் மூலமாவது எப்படியாவது இவர்களுக்குச் சமயத்திற்கு ஏற்பப் பணம் வந்துகொண்டே இருக்கும். சாப்பிடுவதிலும், சிற்றின்பத்திலும் பணத்தை நிறையச் செலவு செய்வார்கள். ஆனால் மற்ற பொதுவான விஷயங்களிலும், அடுத்தவர்களுக்கு உதவுவதிலும் மிகுந்த கஞ்சத்தனம் பார்ப்பார்கள். தங்களது சபல புத்தியின் காரணமாகப் பல அன்பர்கள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி, ஏங்கி, பல முயற்சிகள் செய்து, பல துன்பங்களை அடைகின்றனர். மனதில் பலவகைக் குணங்கள், பொறாமைகள், மற்றவர்களைப் புண்படுத்தும் குறும்புப் பேச்சுகள் இவர்களுக்கு உண்டு. ஆனால் எவராவது இவர்களுடைய துயரங்களையும், துன்பங்களையும் பற்றிப் பேசினால் இவர்களுக்கு அந்த இடத்தில் இருக்கப் பிடிக்காது! இவர்களுக்கு ஓரளவு கோப குணமும் உண்டு. கோபம் வரும் போது முரட்டுத்தனமாக நடந்துகொள்வார்கள்.

எப்போதும் இவர்கள் தங்களது அதிர்ஷ்டத்தையே நம்பி இருப்பார்கள். துன்பப்பட்டு உழைப்பதில் அலட்சியம் காட்டும் குணம் இருக்கும். இதை இவர்கள் மாற்றிக்கொண்டால்தான் 'விஜயலட்சுமி' எப்போதும் இவர்களுடன் இருப்பாள். தங்களின் அனாவசியக் குடும்பச் செலவுகள், அனாவசிய ஆடம்பரச் செலவுகள் ஆகியவற்றைக் குறைத்துக் கொண்டால்தான், பணம் எப்போதும் நீங்காமல் இவர்களுடன் இருக்கும். இல்லையெனில் கடன் தொல்லையும், ஏமாற்றமும் ஏன் வறுமையும்கூட ஏற்பட்டு விடும்.

**குடும்ப வாழ்க்கை:** ஆறாம் எண்ணில் பிறந்தவர் களுக்கு குடும்ப வாழ்க்கை திருப்தியளிப்பதாகவே அமையும். பெரும்பாலானவர்கள் காதல் விஷயங்களில் வெற்றிபெற்று தன் மனதிற்குப் பிடித்தவரையே வாழ்க்கை துணையாக அடைவர். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிலவும். தெய்வ காரியங்களில் ஈடுபாடு உடையவர்களாக இருப்பார்கள்.

**பொருளாதாரம் :** ஆறாம் எண்ணில் பிறந்தவர்கள் ஆடை, ஆபரணங்களுக்காகவும், ஆடம்பர வாழ்க்கை வாழ்வதற்காகவும் நிறைய செலவு செய்வார்கள். சிலர் பிறவியிலேயே செல்வந்தராக இருப்பதால்தேவைகள் அனைத்தும்பூர்த்தியாகும். நடுத்தர வர்க்கம் என்றால் பொருளாதார நிலை பற்றாக்குறையாகவே இருக்கும். எப்பாடுபட்டாவது தம்முடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அளவிற்கு சம்பாதிக்கக்கூடிய ஆற்றல் இருக்கும்.

தனக்குப் பிடிக்காத வர்களை சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதுபோல ஓட ஓட விரட்டுவார்கள்.

**தொழில்:** ஆறாம் எண்ணிற்குரியவர் சுக்கிரனின் ஆதிக்கத்தை பெற்றவர்கள் என்பதால் கலைத்துறை சம்பந்தமானவற்றில் முன்னேற்றமடைவார்கள். சினிமா, சங்கீதம், இசை, நாட்டியம், நாடகம் போன்றவற்றில் பிரகாசம் உண்டாகும். அரசாங்கப் பணிகளில் உயர் பதவிகள் அமையும்.

**அதிர்ஷ்ட தேதி - 6,15,24,9,18,27, அதிர்ஷ்ட நிறம் - வெளிர்நீலம், அதிர்ஷ்ட திசை- தெற்கு, அதிர்ஷ்ட கிழமை - வெள்ளி, அதிர்ஷ்ட கல் - வைரம் அதிர்ஷ்ட தெய்வம் - ஸ்ரீலட்சுமி**

# விநாயகர் சதுர்த்தி

யாழ்ப்பாணம், ஓக.27

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு வண்ணார்ப்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று புதன்கிழமை விஷேட பூஜைகள் இடம்பெறவுள்ளது.

காலை 10.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி, மூலமூர்த்திப் பூஜை, வசந்தமண்டபப் பூஜை என்பன நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதியுலா வருவார். (ச-17)

# அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஓக.27

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய பாலஸ்தான வசந்தமண்டப ஆரம்ப நிகழ்வாக அடிக்கல் நடும் நிகழ்வு நாளை மறுதினம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும் என ஆலய பரிபாலசபையினர் அறிவித்துள்ளனர். (ச-131)

# நல்லூர்த் திருவிழா விடுமுறை பதில் பாடசாலை நாள் சனியன்று

யாழ்ப்பாணம், ஓக.27

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு இந்த மாதம் 21ஆம் திகதி யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட விடுமுறைக்கான பதில் பாடசாலை நாள் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறுமென வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு இந்த அறிவிப்பை உத்தியோகபூர்வமாக விடுத்துள்ளது. (ச-25,66,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

சோகம் எனும் பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதைத் தடுக்க இயலாது. ஆனால் உங்கள் தலையில் கூடுகட்டி வாழ்வதைத் தவிர்க்கலாம்.

ஸ்மைலி

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# ஒரு கைதும் அரசியல் கணக்குகளும்

இலங்கை அரசியலில் அதிர்வை ஏற்படுத்தியுள்ள அண்மைய சம்பவம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்ட விவகாரமே. இதற்குக் காரணம் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், நாட்டின் உச்ச பதவியை வகித்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ள முதல் நிகழ்வு இது என்பதும், ரணில் விக்கிரமசிங்க நீண்டகாலமாக அரசியலில் முக்கியமான பங்காற்றியதுமாகும். இக் காரணங்களால், இந்தக் கைது உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியிலும் அதிக அவதானிப்பைப் பெற்றுள்ளது. அர சியல் அனுபவம், பொருளாதாரச் சீர்திருத்த முயற்சிகள், வெளிநாட்டு உறவுகள் ஆகிய துறைகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியவர் என்பதால், இந்தச்சம்பவம் இலங்கையின் அரசியல் எதிர்காலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது மறுக்கமுடியாத ஒன்று.

தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இதனைத் தனது ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே கற்பிதம் செய்கின்றது. சட்டம் அனைவருக்கும் சமம் என்ற அரசியல் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தியுள்ளோம் என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி என்ற நிலையிலும், ரணில் விக்கிரமசிங்க சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டிருப்பது, ஜனநாயகப் பின்புலத்தில் பாராட்டத்தக்க முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் ஊழல் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துவந்தார்கள் என்ற விமர்சனத்தை மனதில் கொண்டால், இம்முறை எடுக்கப்பட்ட துணிச்சலான நடவடிக்கை முன்னுதாரணமாகும். அதேவேளை, எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டும் முற்றிலும் புறக்கணிக்கப்படமுடியாதது. அவர்கள், இது ஊழலை எதிர்க்கும் நடவடிக்கையல்ல, அரசியல் பழிவாங்கல் மட்டுமே என்று வாதிடுகின்றனர். ஆனால் இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி இழந்த தங்களின் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்க்கட்சிகள் முயலக்கூடும், அல்லது ரணில் விக்கிரமசிங்க கைதைப் பயன்படுத்தி தங்கள் மீதான சட்டப்பாய்ச்சலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் முயலக்கூடும் என்ற கருத்துகளையும் மறுப்பதற்கில்லை.

அண்மைய ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, உணவுப்பொருள்களின் விலையேற்றம், வேலைவாய்ப்புப் பற்றாக்குறை போன்ற சவால்களால் மக்கள் பெரும் ஏமாற்றத்தில் உள்ளனர். அந்த ஏமாற்றத்தின் வெளிப்பாடாகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அவர்கள் ஆட்சியில் இருத்தினர். ரணில் விக்கிரமசிங்க கைது வெறும் அரசியல் நாடகமாக மாறிவிட்டால், தேசிய மக்கள் சக்தி மீதான அதிருப்தி அதிகரித்து மக்களின் நம்பிக்கை குறையக்கூடும். மறுபுறம், இது உண்மையான சட்டநடைமுறையின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டால், மக்கள் அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு முயற்சிகளுக்கு வலுவான ஆதரவளிக்கக்கூடும். இந்தக் கைது நடவடிக்கையை சர்வதேச நாடுகளும், சர்வதேச நிதி நிறுவனங்களும், வெளிநாட்டு முதலீட்டாளர்களும் மிகுந்த கவனத்தோடு கண்காணிக்கின்றனர். ஏற்கனவே கடன் சுமையிலும் பொருளாதார சீர்திருத்தக் கட்டுப்பாடுகளிலும் போராடிவரும் இலங்கைக்கு, வெளி நாட்டு நம்பிக்கை மிக அவசியம். எனவே, நீதிமுறை சுயாதீனமாகவும் வெளிப்படையாகவும் செயற்படுவதே நாட்டின் நலனுக்கு உகந்தது.

ரணில் விக்கிரமசிங்கவின் கைது சாதாரணமாக அடங்கிவிடக்கூடிய சம்பவமல்ல. அது, நாட்டின் சட்ட நடைமுறைகளுக்கும் ஜனநாயக வலிமைக்கும் ஒரு சோதனைக் களமாக மாறியிருக்கின்றது. இது உண்மையான நீதியின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டால், ஊழல் அரசியலை ஒழிக்கப் புதிய திசையை நாட்டுக்கு வழங்கும். இல்லையெனில், அது அரசியல் பழிவாங்கலாகவே மக்களால் புரிந்துகொள்ளப்பட்டு, அரசியல் சூழலில் மேலும் குழப்பத்தை உருவாக்கும். இதனால் இந்தச் சம்பவத்தை அரசியல் இலாப,.நட்டக் கணக்குகளுக்காகப் பயன்படுத்தாமல் - குழப்பங்களை ஏற்படுத்தாமல் ஜனநாயகத்தையும், சட்டத்தின் உயர்ந்த நிலையையும் பாதுகாக்கும்வகையில் செயற்படுவது ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் முன்னாலுள்ள மிகப்பெரிய பொறுப்பு.




# முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியம் நீக்கப்படாது

கொழும்பு, ஓக.27

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை இரத்துச் செய்யும் யோசனையில் அவர்களின் ஓய்வூதியம் நீக்கப்படாது என்று நீதிமன்றில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியலமைப்பின் கீழ் குறித்த ஓய்வூதியம் நீக்கப்படாது என்று சட்டமா அதிபர் திணைக்களம் விளக்கமளித்துள்ளது. மாறாக 1986ஆம் ஆண்டின் ஜனாதிபதி உரிமைகள் சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது துணைவியர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் சலுகைகளே குறைக்கப்படவுள்ளன என்று சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

முன்மொழியப்பட்ட முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகளை இரத்துச்செய்தல் யோசனையை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட ஏழு மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். (ச-இ)



# தங்கம் விலை சடுதி உயர்வு

கொழும்பு, ஓக.27

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் தங்கத்தின் விலை நேற்று பவுண் ஒன்றுக்கு 2,000 ரூபாவால் அதிகரித்துள்ளதாக, தங்கநகை வியாபாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். நேற்றைய தங்க விலை நிலவரப்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 2 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. அத்துடன் 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 252,500 ரூபாவாகவும், விற்பனை செய்யப்பட்டது. (ச-இ)

# டயானாவுக்கு பிணை

கொழும்பு, ஓக.27

பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலையானதைத் தொடர்ந்து அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. செல்லுபடியான விசாக்கள் இன்றி சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருத்தல் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் டயானா கமகேவுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 7 வழக்குகள் தொடர்பான விசாரணைகளுக்காக அவர் நீதிமன்றில் முன்னிலையாகாமல் இருந்த நிலையில் அவருக்கு நீதிமன்றி னால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ஹரீன் வழக்கு ஒத்திவைப்பு!

தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கடந்த பொதுத்தேர்தலின்போது தேர்தல் சட்டங்களை மீறியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, நீதிமன்றில் நிலுவையிலுள்ள வழக்கு விசாரணைக்காக ஹரீன் பெர்னாண்டோ நேற்று பதுளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையானார். இதன்போது, பதுளை நீதவான் நுஜித் டி. சில்வா வழக்கு விசாரணையை அடுத்த ஆண்டு ஜனவரி 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (ச-இ)



# சஷீந்திர ராஜபக்சவுக்கு தொடர் விளக்கமறியல்

கொழும்பு, ஓக.27

ஊழல் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்புச் சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களைப் பரிசீலித்த பின்னர் கொழும்பு தலைமை நீதவான் அசங்க போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்தார். அதன்படி, எதிர்வரும் 29 ஆம் திகதி வரை சஷீந்திர ராஜபக்ச தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-இ)



நாளை

வியாழக்கிழமை - ஆவணி 12

28.08.2025

சுபநேரம் : 07.35 - 09.05

ராகுகாலம் : 01.35 - 03.05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைத்தற்கரிய பொக்கிஷங்களே வடக்கு மாகாணத்தின் வளங்கள்

## சரியாகப் பயன்படுத்தாமை கசப்பான உண்மை வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு



வவுனியா, ஓக.27

வடக்கு மாகாணத்திலுள்ள வளங்களைப் போன்று இலங்கையில் வேறு எந்த மாகாணங்களிலும் வளங்கள் இல்லை. ஆனால் எமது மாகாணத்திலுள்ள பல வளங்களை நாங்கள் இன்னமும் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். வவுனியாப் பல்கலைக்கழக வியாபார இணைப்பு அலகு மற்றும் முயற்சியாண்மை கற்கைநெறி மாணவர்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட வர்த்தகச் சந்தைக் கண்காட்சியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் திறந்து வைத்தபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகளவு வளங்களைக்கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டமே இருக்கின்றது. ஆனால் வறுமையிலும் உச்சமான மாவட்டமாக அதுவே இருக்கின்றது. எங்கள் வளங்களை நாங்கள் உரியவகையில் பயன்படுத்தவில்லை என்பதுதான் இதனூடாகப் புலப்படுகின்ற உண்மை.

நாங்களும் இலங்கையின் முதற்தர மாகாணமாக மாறவேண்டும். பொருளாதாரத்துக்கு அதிகூடிய பங்களிப்புச் செய்கின்ற மாகாணமாக மாறவேண்டும். அதற்குரிய அடித்தளங்களை அமைப்பதற்குரிய காலச்சூழல் இப்போதுள்ளது.

போர் முடிந்த காலத்தில் எமது மாகாணத்தில் ஒன்றிரண்டு முயற்சியாளர்கள் தான் இருந்தார்கள். இன்று அது அதிகரித்திருக்கின்றது.

அன்று அவர்களின் உற்பத்திகளின் முடிவுகள் சிறப்பாக அமையவில்லை. ஆனால் இன்று சிறப்பாக உள்ளன. இதை இன்னும் விரிவாக்கவேண்டும். குறிப்பாக எங்களின் பலமான விவசாயம் மற்றும் கடல்வளத்திலிருந்து பெறுமதிசேர் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும்.

எங்களுக்கு அயலிலுள்ள இந்தியாவிலும் பனை மர உற்பத்தியை பெறுமதிசேர் உற்பத்தியாக மாற்றி பல பொருள்களை உற்பத்தி செய்கின்றார்கள். ஆனால் நாங்கள் பனை வளத்தைக் கொண்டுள்ளபோதும் பெறுமதிசேர் உற்பத்திப் பொருள்களாக மாற்றம் செய்வதில் பின்னிலையில் இருக்கின்றோம் - என்றார். (ச-113)

## சடலத்தை பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ். போதனா மருத்துவமனையில் 01.11.2024 அன்று நினைவாற்றல் குன்றிய நிலையில் சேர்க்கப்பட்டு மந்திகையைச் சேர்ந்த 72 வயதுடைய விஜயரத்தினம் சிறீதரன் என்பவர் உறவினர்கள் இன்மையினால் கைதடி முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டார். அவர் அங்கு கடந்த 22ஆம் திகதி காலமாகிவிட்டார்.

இவரது சடலம் யாழ்.போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவருடைய உறவினர்கள் யாராவது இருப்பின் சடலத்தை அடையாளம் காட்டி பொறுப்பேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## நிரந்தரக் கட்டடத்துக்கு அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஓக.27

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பத்தாம் இலக்கக் கிளைக்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடுகை செய்யும் நிகழ்வு சங்கத்தின் தலைவர் கு. ஜனகன் தலைமையில் இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கட்டம் அமைப்பதற்குரிய இரண்டு பரப்புக் காணியை மட்டுவில் வடக்கைச் செர்ந்த நன்டிகாடையாளர் சின்னத்தம்பி பொன்னம்பலம் என்பவர் அவரது மகளான அமரர் கௌரிதெவி என்பவரின் ஞாபகார்த்தமாக அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ச-25,9,131)

## மன்னார் வளம் சூறையாடல்; வவுனியாவில் கவனவீர்ப்பு!

வவுனியா, ஓக.27

மன்னாரில் மேற்கொள்ளப்படும் கனியவள அகழ்வுக்கு எதிராக வவுனியா இளைஞர்களின் ஏற்பாட்டில் சுற்றுச்சூழலுக்கான இளைஞர் நடவடிக்கை அமைப்பின் பங்கேற்புடன் 'கருநிலம்' என்னும் தொனிப்பொருளில் கவனவீர்ப்புப் போராட்டம் வவுனியாபழையபேருந்துநிலையத்துக்கு முன்பாக அண்மையில் இடம்பெற்றது. "இந்த மண் எங்களின் உரிமை" "எங்கள் எதிர்காலத்திற்கான வளத்தை அழிக்காதே" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச-110)



## புகையிரதக் கடவையைக்கோரி இந்திராபுரம் மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக, 27

பளை இந்திராபுரம் கிராமத்துக்கு நிரந்தர புகையிரதக் கடவையை அமைக்குமாறு கோரி எதிர்வரும் 2ஆம் திகதி ஜனாதிபதி பளைக்கு வரும் வேளையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க கிராம மக்கள் தீர்மானித்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வெடி பொருள்கள் அகற்றப்பட்டு கடந்த 2016 ஆம் ஆண்டு மீள்குடியமர்வு இடம்பெற்று எட்டு வருடங்கள் கடந்த நிலையில் புகையிரதக் கடவை அமைத்துத் தரப்படவில்லை. ஜனாதிபதி, பிரதமர், போக்குவரத்து அமைச்சர், மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பல தடவைகள் இதுதொடர்பில் முறையிட்டபோதிலும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை.

இந்தநிலையிலேயே குறித்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ச-25,9)

## ஆவணிச் சதுர்த்தி பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக.27

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய ஆவணிச் சதுர்த்திப் பெருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.15 மணிக்கு 1008 சங்காபிஷேகம், பஞ்சமுகப் பிள்ளையார் அர்ச்சனை, தீபாராதனைகள் என்பன இடம்பெற்று மாலை 5 மணிக்கு மூலஸ்தானப் பூசையுடன் பெருவிழா ஆரம்பமாகும். தொடர்ந்து 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வருவார். மாலை 5.30 மணிக்கு ஆலய உள்மண்டபத்தில் சைவசமய அறிவுசார் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ், பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் வயலின், வீணை இசைநிகழ்வும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இராப்போசனம் வழங்கப்படும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-41)

## நூல் அறிமுகமும் விமர்சனமும்

யாழ்ப்பாணம், ஓக.27

அ.யேசுராசாவின் பனை மீன்நாடன்பக்கம் (பத்தி எழுத்துத் தொகுப்பு) நூல் அறிமுகமும் விமர்சனமும் ச.சத்தியதேவன் தலைமையில் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடம் (பலாலி வீதி, வீனஸ் மருத்துவமனை அருகில் ) 19/2 அம்மன் வீதியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இடம்பெறவுள்ளன. (ச-41-159)

## புளியம்பொக்கணைப் பாலம் புனரமைப்புப்பணி ஆரம்பம்

முல்லைத்தீவு, ஓக.27

பரந்தன் முல்லைத்தீவு வீதியின் புளியம்பொக்கணைச் சந்தியிலுள்ள பிரதான பாலத்தில் பல வருடங்களின் பின்பு புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பாலம் புனரமைப்புப் பணிகளுக்காக 2019 ஆம் ஆண்டு ஏற்கனவே இருந்த பழைய பாலத்தை உடைத்து தற்காலிக பாலம் அமைக்கப்பட்டது. தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட கொரோனா மற்றும் பொருளாதார நிலை நெருக்கடியால் நிதியின்மை காரணமாகவும் குறித்த புனரமைப்புக் கைவிடப்பட்டது. இந்தநிலையில் கிராம அமைப்புகளின் தொடர் கோரிக்கையைத் தொடர்ந்து புனரமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : ரத்தினம் சந்திரபாலன் பெண் உஷாநந்தினி
ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : சொந்தக்காரர்

ஆதன இல -30/3 வீதி - வாய்க்கால் வீதி வட்டாரம் 01

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 01 "வாய்க்கால் வீதியில்" இவ் ஆதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 17.06.2002 ம் திகதிய பிரசித்தநொத்தாரிஸ் திரு பண்டிதர் ப.இராசகுரு அவர்கள் முகதாவில் இலக்கம் 3325 இல் அத்தாட்சிப்படுத்திய சீதன உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். வீரவாகு பெண் சின்னம்மாவின் சீதனம் என வெளிப்படுத்தி வீரவாகு கார்த்தியேசுவும் பெண் பாக்கியலட்சுமியும் இவ்வாதனத்தை ரத்தினம் சந்திரபாலன் பெண் உஷாநந்தினி வழங்கியுள்ளனர்.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.முரளீதரன் அவர்களால் அளந்து வரைந்த 0461 ம் இலக்க 22.04.2025 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு 1 ஆக காட்டப்பட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிதென்மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகலிறை J/151 மாதகல் கிராம அலுவலர் பகுதி "செம்பிளாச்சி" நிலப்பரப்பு இல இரண்டு ஆகும் இதன் எல்லைகள்
கிழக்கு : தம்பிராசா பெண் வசந்தகுமாரி
வடக்கு : கைஒழுங்கை
மேற்கு : நவரத்தினராசா பெண் இராசமணி
தெற்கு : கந்தையா விநாயகமூர்ததி


மேற்குறித்த ஆதனம் ரத்தினம் சந்திரபாலன் பெண் உஷாநந்தினி என்பவருக்கு 3325 இல 17.06.2002 திகதிய சீதன உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. ரத்தினம் சந்திரபாலன் பெண் உஷாநந்தினி என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் ரத்தினம் சந்திரபாலன் பெண் உஷாநந்தினி என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.
மானிப்பாய்.

(CS/59237) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 10 . 1952



மறைவு 25 . 08 . 2025

### சின்னையா சிவயோகநாதன்

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவயோகநாதன் நேற்றுமுன்தினம் (25.08.2025) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ராணியின் அன்புக் கணவரும், ரவிராஜ் (நொதேன் பாமசி கோண்டாவில்), நந்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன், டிலானி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிர்த்திக், நயனிகா, திவியா, மயூரன் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரன், யோகேஸ்வரி, குலேந்திரன் மற்றும் ஜெகதீஸ்வரி, கருணானந்தன், இராசேந்திரன் ஆகியோரின்அன்புச் சகோதரனும், யோகலிங்கம், கலாவதி, காலஞ்சென்ற இரவீந்திரநாத் மற்றும் நந்தினி, ஜெயபவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகினி, காலஞ்சென்ற ஜெகன், துஷ்யந்தி, அபிராமி ஆகியோரின் அன்பு மாமனாரும், கயன், கௌசி, கோபி, சிந்து, சங்கவி, யசிந்தன், அருண்யா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.08.2025) வியாழக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இராமகிருஷ்ணா வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (CS/59244) J-1

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 09 . 1950



மறைவு 24 . 08 . 2025

### கணபதிப்பிள்ளை ஆலாலசுந்தரம்

(மட்டுவில் வடக்கு, அம்மன் கோவிலடி - சாவகச்சேரி)

யாழ். மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ஆலாலசுந்தரம் கடந்த (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தேவகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்வினி, செந்தூரன், பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராஜ், பிரவீணா, கார்த்திக் ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுஷன், தனுஷன், ஆரன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் சிவபாதசுந்தரம், அமரர் கமலாதேவி, மற்றும் விமலாதேவி, சண்முகசுந்தரம், சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் யோகநாதன், அமரர் கதிர்காமநாதன், மற்றும் புனிதவதி, கமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.08.2025) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மட்டுவில் வடக்கு - ஊரிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
075 786 4011
+44 757 830 0754

அம்மன் கோவிலடி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (CR/45924) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 01 . 1940



மறைவு 25 . 08 . 2025

### கார்த்திகேசு கந்தசாமி

(ஓய்வுபெற்ற புகையிரத சாரதி)

யாழ். நீராவியடியை பிறப்பிடமாகவும் சுன்னாகம் மின்சார நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தசாமி அவர்கள் கடந்த (25.08. 2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணி தேவியின் அன்புக் கணவரும், பிரேமலதா, பிரேமகாந்தன், சிறிகாந்தன் ஆகியோரின் அன்பு தந்தையும், ஈஸ்வரன், சுகந்தி, மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷானி, சுபானி, அபிஷன், தேனுயா, திலக்சன், துஷாந் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (28.08.2025) வியாழக்கிழமை முற் பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேம்.

இல23,
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு: 0773283602
07746879228
004741495057

(CS 59235) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னிய மன்னனின் வெற்றி விழா கற்சிலைமடுவில்

முல்லைத்தீவு, ஓக.27

பண்டாரவன்னிய மன்னன் ஆங்கிலேயர்களிடம் இருந்து முல்லைத்தீவுக் கோட்டையைக் கைப்பற்றியதன் 222ஆம் ஆண்டு வெற்றி விழா நிகழ்வு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பண்டார வன்னியனின் உருவச்சிலை அமைந்துள்ள கற்சிலை மடுப் பகுதியில் நடைபெற்றது.



பண்டாரவன்னியனின் உருவச்சிலைக்கு விருந்தினர்கள் மாலை அணிவித்து மலர்தூவி வணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன நடைபெற்றன. பண்டாரவன்னியனின் வரலாற்றை எடுத்துக் கூறும் பாடசாலை மாணவர்களின் பட்டிமன்றம் மற்றும் பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்வு என்பன சிறப்பாக இடம் பெற்றன. நிகழ்வின்போது மாவீரன் பண்டாரவன்னியனின் வரலாற்றினைக் கூறும் அடங்காப் பற்றின் வன்னி என்ற வி.ப.லிங்க ஜோதி எழுதிய நூலும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. (எ-9)

சாவகச்சேரி நகரில்

# சுற்றுவீதி, நடைபாதை புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.24



சாவகச்சேரி நகரை அழகுபடுத்தும் திட்டத்துக்கு அமைவாக பேருந்து நிலையச் சுற்றுவீதி மற்றும் வீதியோடு இணைந்த நடைபாதை என்பவற்றின் புனரமைப்புப் பணிகள் உபதவிசாளர் ஞா.கிஷோரால் சம்பிரதாயபூர்வமாக நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் நகராட்சி மன்ற உபதவிசாளர் ஞா.கிஷோர், உறுப்பினர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர், நகர முச்சக்கரவண்டிச் சங்கத்தினர், தனியார் சிற்றூர்திச் சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-28,27)

**உடனடி விற்பனைக்கு**

அலுவலக பாவனையில் இருந்த Printer, Laptop, Photocopier, A/C மற்றும் Scanner, Washing Machine, Fridge என்பன முழுமையாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 302 4234

**விதை நெல் விற்பனைக்கு**

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு முளைத்திறன் பரிசீலிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.

077 659 2044

(CR/45925) LJ

**வீடு வாடகைக்கு தேவை**

4 பேர் கொண்ட குடும்பத்திற்கு யாழ் நகரை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 076 234 5956

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 . 01 . 1960 | 21 . 08 . 2025 |

### ஜசிந்தா (வசந்தி) நவரத்தினம்

உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதியை பிறப்பிடமாகவும், கோண்டாவில் வடக்கு, தில்லையம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜசிந்தா (வசந்தி) நவரத்தினம் அவர்கள் கடந்த (21.08.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவல் கிறிஸ்தோபர் மற்றும் - பூபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னன் - செல்வி தம்பதியரின் மருமகளும், பொன்னன் நவரத்தினம் (நவம் - ஓய்வுபெற்ற பனை அபிவிருத்தி சபை ) அவர்களின் அன்பு மனைவியும், மேரி ராதிகா, மேரிலிகோரியா, மேரி அனிற்ரா, டக்ளஸ் (சுதன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சொப்னா (சுவிஸ்), சர்மினா, ரதீபன் (பனை அபிவிருத்திச் சபை), தீபனா (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிரோஷன் (சுவிஸ்), ஸ்ரீராம் (ராம் - கிருபா லேணர்ஸ் பயிற்சிவிப்பாளர்), ரேகா (ரம்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிஷாலன், யக்சிதா, அஷ்வின், அஜய், ரித்திகா, டார்னிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குமரகோட்டம் வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்
நவரத்தினம் ரதீபன்
077 833 5673, 077 224 7909

(CS/59241) 5-1

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 . 10 . 1948 | 25 . 08 . 2025 |

### திருமதி ஜெயராணி மனோகரன் (ராணி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராணி மனோகரன் கடந்த (25.08.2025) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஐயம்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் திரு.மனோகரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி மன்மதராணி, திரு.குகதாஸ் (இலங்கை), திரு.மோகனதாஸ் (ஜேர்மனி), திருமதி.நிர்மலா (சுவிஸ்), திரு.சிவதாசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வராணி, லதா, மீரா, தனபாலசிங்கம், ஞானேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், றுசாந்தி (பிரான்ஸ்), சர்ஸன், லக்சிகா, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நியூஸ்ரன் (பிரான்ஸ்), நிதுசனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (27.08.2025) புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல், தகனக்கிரிகைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

630, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 613 7172

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SDB வங்கி
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ [lka], Reg. No: PB62PQ
#உங்களைமதிக்கும்




# TENDER NOTICE

Sealed tenders are invited by Uduvil Girls' College for the *Renovation of Mission House roofing and renovation of Hostel kitchen.*

Tender documents may be collected from the School Office from Friday, 29th August to Wednesday, 4th September between 8am and 2.30pm on payment of a non-refundable fee of Rs.1,000.

Only tenders from registered contractors will be accepted. Completed tenders must be submitted on or before 15th September, 2.30 p.m. Tenders will be opened on 19th September at 2.00 p.m. at the College.

The College reserves the right to accept or reject any or all tenders.

Principal
Uduvil Girls' College

# வேலை ஆட்கள் தேவை

யாழ்நகரில் உள்ள பிரபலியமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன்தேவை. மேலும் கணினி அனுபவம் உள்ள பில் கிளாக் இருபாலாரும் விரும்பத்தக்கது.

**077 748 8093**

# வீடு தேவை

அரச ஊழியர் ஒருவருக்கு சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, இளவாலை மற்றும் தெல்லிப்பளையை அண்டிய இடத்தில் அறை/ அனக்ஸ் Or சிறிய வீடு வாடகைக்கு தேவை.


தொடர்பு: **074 080 0969**

(CR/30463) J-1

# ஆன்மிக உரை

வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசுவாவசு வருடப் பெருவிழாவை முன்னிட்டுச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. பெருவிழாவின் மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை 'கலியுக தர்மம்'எனும் தலைப்பில் ஆசிரியர் செஞ்சொற்செல்வன் செ.ஸ்ரீ ஆதவன் ஆன்மிக உரை ஆற்றினார்.(ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மன்னார் ரோட்டரிக் கழகம் சைக்கிள்கள் வழங்கியுள்ளது. தமிழ்நாடு சேலம் ரோட்டரிக் கழகத்தின் நிதி அனுசரணையுடன் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் ரோட்டரிக் கழகத்தின் தலைவர் லக்ஷ்ன் தலைமையில் மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 57 மாணவ, மாணவியருக்கு இரண்டு கட்டங்களாக இவை வழங்கப்பட்டுள்ளன. (எ-41)



சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் ஞா. கிசோர் தனது முதல் மாதக் கொடுப்பனவில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட மைதானத்துக்கான மின்விளக்குகளை கொள்வனவு செய்து பொருத்திமைதானத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை கழகத்தினரிடம் ஒப்படைத்தார். இதே போன்று கடந்த வாரம் மீசாலை கிழக்கு வட்டார உறுப்பினர் பிரகாஷ் கல்வயல் வட்டாரத்தில் உள்ள ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயத்துக்கு இரு குப்பை சேகரிப்பு தொட்டிகளைக்கொள்வனவு செய்து வழங்கியிருந்தார். (எ-25, 9)





பச்சிலைப்பள்ளிப் பிரதேச இந்துசமய அறநெறி மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது 2025க்கான போட்டிகள் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது பேச்சாற்றல், கதாப்பிரசங்கம், நாடகம், நடனம்,நீதிநூல் ஒப்புவித்தல், பண்ணிசையும் பஜனையும், வில்லுப்பாட்டு, சொல்லாடற்றிறன் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன. (ச-9)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் மூன்றாம் திருவிழாவில் முருகப் பெருமான் குதிரை வாகனத்தில் எழுந்தருளினார். (ச-17)



குடிசார் அமைப்பை நிறுவனமயமாக்கல் மற்றும் பதிவு செய்தல் தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் புங்கங்குளம் சந்தியில் அமைந்துள்ள ஜேஹெஸ்ட் ஹோட்டலில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தயாபரன், கிறிசலிஸ் நிறுவனத்தின் திட்ட மற்றும் பிராந்திய முகாமையாளர் ம.பிரபாகரன், சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் வி.பி.டி.பிரகாஷ், அரச சார்பற்ற நிறுவனங்களின் எம்.இ. ஆலோசகர் நாவபிரசாத், வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் குடிசார் அமைப்பின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-159)

## மரண அறிவித்தல்



### பவளம்மா சஞ்சீவராசா

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் - அளவெட்டி சதானந்த வித்தியாசாலை)**

அளவெட்டி வடக்கு, அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பவளம்மா சஞ்சீவராசா அவர்கள் கடந்த (25.08.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - நாகம்மா தம்பதியரின் இளைய மகளும், சண்டிலிப்பாயை சேர்ந்த காலஞ்சென்ற சஞ்சீவராசா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற செந்திராணி மற்றும் ஸ்ரீதரன், சாந்தினி, சிவதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகானந்தன் மற்றும் தங்கராசா, சுபாலினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபறாஜிதன், தர்சினி, பிரவீன், பிரதுசா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், ஹரியின் பாசமிகு அப்பம்மாவும், வைதர்வியின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்ற இராசம்மா, பொன்னுத்துரை, இராசையா, தருமரட்ணம் மற்றும் நாகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28-08-2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11:00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு
15
04
1946



இறப்பு
25
08
2025

### திருமதி நடராசா செல்லமுத்து (பூமணி)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா செல்லமுத்து அவர்கள் கடந்த 25.08.2025 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி நடராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விநாசித்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பராசக்தி, கனகம்மா, அருணாசலம் மற்றும் இராசாத்தி, தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌரிதாசன், கௌரிபாலன், கௌரிநேசன், கௌரிசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சசிகலா, சுகந்தினி, சிவதர்சினி, அனுசா ஆகியோரின் அன்பு மாமியாரும், அபூர்வன், ஆருஷன், ஆகர்ஷன், அமிசா, அபினாஸ், அஸ்வின், சரிக்கா, கேசிகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் வேம்பிராய் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 618 7270

(CR 459927) A

■ எஸ்.ஏகநாதன்
*(M.Ed (Reading) SLIIT)*

# உயர்தரப் பாடத்தேர்வும் உளவியல் தாக்கங்களும்




2020 இல் இலங்கையில் நடத்தப்பட்ட ஆய்வில், பாடத் தேர்வால் திருப்தியில்லாத உயர்தர மாணவர்களில் 28 வீதமானவர்களுக்கு மனச்சோர்வு அறிகுறிகள் இருந்துள்ளன. தமக்குப் பொருந்தாத துறையில் படிப்பதால், பின்னர் எந்தத் தொழிலைத் தேர்வு செய்வது என்ற குழப்பம் நீண்டகாலம் நீடிக்கும்.


க.பொ.த உயர்தரத்தில் பாடத் தேர்வு என்பது ஒரு மாணவனின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கியமான முடிவாகும். இலங்கையில், க.பொ.த. உயர்தரப் பாடத்துறையைத் தேர்ந்தெடுக்கும் தருணம், மாணவருக்கும் பெற்றோருக்கும் ஒரே நேரத்தில் நம்பிக்கை, பெருமை மற்றும் சிறிதளவு பயத்தையும் தருகிறது. ஆனால், பல நேரங்களில் இந்த முடிவு மாணவரின் சொந்த ஆர்வம் அல்லது திறனை விட, பெற்றோரின் விருப்பம், சமூக அழுத்தம் அல்லது நண்பர்களின் செல்வாக்கினால் பாதிக்கப்படுகிறது. இலட்சியத்துடன் பயணிக்கும் மாணவனுக்குப் பாடத் தேர்வு குழப்பகரமானதாக அமையாத போதும், ஏனைய மாணவர்களின் தவறான பாடத் தேர்வின் விளைவுகள் கல்விசார் சிக்கல்களை மட்டுமல்லாமல், ஆழமான நீண்டகால உளவியல் பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன. இதிலிருந்து முதலில் சரியான பாடத் தேர்வை மேற்கொள்வதால் தப்பித்துக்கொள்ளலாம்.

**மாணவர்கள் எதிர்கொள்ளும் உளவியல் சவால்கள்**

விருப்பமற்ற பாடங்களைப் படிப்பது ஒரு சுமையாக மாறி, தினசரி பாடப்பயிற்சி மனஅழுத்தத்தின் மூலமாகிறது. குறிப்பாக, விஞ்ஞானப் பாடத்துறையைத் தேர்வு செய்து, அதில் தாம் எதிர்பார்த்த அளவுக்கு மதிப்பெண்கள் பெற முடியாமையால் மன அழுத்தத்திற்கு உள்ளாகி மனசோர்வுக்கு உள்ளாகின்றனர். ஆய்வுகள் காட்டுவது போல, பாடத் தேர்வும் மாணவரின் ஆர்வமும் பொருந்தாமல் இருந்தால், கல்வி அழுத்தம் மற்றும் கவலை 30 முதல் 40 வீதம் வரை அதிகரிக்கும். தொடர்ந்து குறைந்த மதிப்பெண்களைப் பெறுவது, "நான் படிக்க முடியாதவன்" என்ற மனப்போக்கை வளர்க்கிறது. இதனால் தொடர்ந்து பயணிக்க முடியாதவனாகின்றான். பாடப்பளு மற்றும் தோல்வி பயம் இணைந்து மனச்சோர்வை உருவாக்கும். 2020 இல் இலங்கையில் நடத்தப்பட்ட ஆய்வில், பாடத் தேர்வால் திருப்தியில்லாத உயர்தர மாணவர்களில் 28 வீதமானவர்களுக்கு மனச்சோர்வு அறிகுறிகள் இருந்துள்ளன. தமக்குப் பொருந்தாத துறையில் படிப்பதால், பின்னர் எந்தத் தொழிலைத் தேர்வு செய்வது என்ற குழப்பம் நீண்டகாலம் நீடிக்கும். இதனால் வாழ்நாள் முழுவதும் உளவியல் பாதிப்பை உண்டாக்கும்.

**பெற்றோரின் உளவியல் பாதிப்புகள்**

பிள்ளையின் விருப்பத்தை மதிக்காமல் தமது விருப்பத்தைத் திணித்துவிட்டோம் என்ற உணர்வு. பிள்ளை படிப்பில் சிறப்பாகச் செயல்படாத போது மனவருத்தம் மற்றும் ஏமாற்றம் ஏற்படுகின்றன. ஆலோசனை, கண்டிப்பு, குற்றச்சாட்டு போன்ற வற்றால் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவு சிதைவடையும். உறவினர்கள் அல்லது சமூகத்தின் விமர்சனங்களைச் சமாளிக்க வேண்டிய நிலை.

**நீண்டகால விளைவுகள்**

விருப்பமற்ற துறையில் வேலை செய்வதால், ஆர்வமின்மை மற்றும் தொழில் சோர்வு ஏற்படும். தனிப்பட்ட திறமைகள் மற்றும் படைப்பாற்றல் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் போகும். "நான் யார்? எனக்குப் பொருத்தமான துறை எது?" என்ற கேள்விக்குப் பதில் காண முடியாமல் போகும்.

**தடுப்பு நடவடிக்கைகள்**

இதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் மூலம் தீர்வு காணமுடியும்.

- மாணவரின் ஆர்வம், திறமை, கற்றல் பாணி ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்.
- அவனது தகுதியை அறிந்து, அது சார்ந்த புலமையுள்ள ஆலோசகரிடம் கலந்து ஆலோசித்து வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல்
- பெற்றோர் திறந்த மனதுடன் தமது பிள்ளைகளுடன் கருத்துகளைப் பகிர்ந்து, துறையின் வாய்ப்புகள் மற்றும் சவால்களை விளக்குதல்

**பிள்ளைகளின் விருப்பத்துக்கும் தகுதிக்கும் அமைய பாடத் தேர்வை மேற்கொள்ளல்**

இன்றைய உலகில் தொழில் வாய்ப்புகள் பெற்றுக் கொள்ளக்கூடிய அல்லது சுய தொழில் அமைக்கக் கூடிய துறைகளைச் சரியாகத் தேர்வு செய்தல்.

விஞ்ஞானத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைக்குக் கூடிய பல்கலைக் கழகத் தேர்வுக்கான வாய்ப்புகள் காணப்படுவது பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு வழங்குதல்.

வர்த்தகம் மற்றும் கலைத் துறையில் சரியான பாடத் தேர்வுகளை மேற்கொள்ளும்போது, இலகுவாகப் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறுவதுடன், எதிர்காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதைப் புரியவைத்தல்.

க.பொ.த. சாதாரண தரம் வரை ஆங்கில மொழி மூலம் கற்ற பின், உயர்தரத்தில் தாய்மொழி மூலம் கற்பதன் மூலம் பாடங்களை விளங்கிக்கொள்வதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் மாணவர்கள் சரியான தேர்வை மேற்கொள்வது பற்றி எடுத்துரைத்தல்.

சில மாணவர்கள் சர்வதேசப் பாடசாலைகளில் வெளிநாட்டுப் பாடத்திட்டத்தில் கற்ற பின், உயர்தரத்திற்கு இலங்கைப் பாடத்திட்டத்தில் கற்பதில் சிரமம் ஏற்படுவதைத் தடுக்க சரியான தேர்வை மேற்கொள்ள வேண்டும். பாடத்தேர்வு என்பது ஒரு தேர்வுச் சீட்டின் குறியீட்டைச் சுட்டும் செயல் மட்டுமல்ல. அது மாணவரின் எதிர்கால வாழ்க்கையை வடிவமைக்கும் முக்கியமான முடிவு. தவறான பாடத் தேர்வு, ஒரு கல்விசார் தவறாக மட்டுமல்ல, மாணவரின் மனநலனையும், பெற்றோரின் மனநிலையையும் பாதிக்கும் ஓர் ஆழமான உளவியல் பிரச்சினையாகும். சரியான பாடத் தேர்வு, மாணவரின் ஆர்வம், திறமை மற்றும் எதிர்கால நோக்கங்களை இணைக்கும் முறையாக இருக்கவேண்டும். இதற்கான பொறுப்பு மாணவர், பெற்றோர் மற்றும் கல்வி அமைப்புகள் அனைவரிடமும் உள்ளது.




இலட்சியத்துடன் பயணிக்கும் மாணவனுக்குப் பாடத் தேர்வு குழப்பகரமானதாக அமையாத போதும், ஏனைய மாணவர்களின் தவறான பாடத் தேர்வின் விளைவுகள் கல்விசார் சிக்கல்களை மட்டுமல்லாமல், ஆழமான நீண்டகால உளவியல் பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான பயணங்களுக்கு வாகனப் பராமரிப்பின் தேவை!




■ மருத்துவர் பா.சயந்தன்
குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்

எமது சாலைகளில் ஒவ்வொரு பயணமும் கண்ணுக்குப் புலப்படாத பல ஆபத்துகளைக் கொண்டுள்ளது. மேலும் பெரும்பாலும், விபத்துகளின் போது ஓட்டுநர்கள் மீது மட்டுமே குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால் முறையான வாகனப் பராமரிப்பு இல்லாமை பெரும்பாலான விபத்துகளுக்குக் காரணமாக அமைகின்றன. தேய்ந்து போன பிரேக் பேட், பலவீனமான ரயர் அல்லது பழுதடைந்த ஹெட்லைட் ஒரு சாதாரண பயணத்தை விபத்தாக மாற்றக்கூடியவை. சாலைப் பாதுகாப்பு என்பது போக்குவரத்து விதிகளுக்குக் கீழ்ப்படிவது மட்டுமல்ல. அது எமது வாகனங்களை சிறந்த நிலையில் வைத்திருப்பதிலும் தங்கியுள்ளது.

**ரயர்கள்: சாலையுடனான முதல் தொடர்பு**
ரயர்கள் மட்டுமே சாலையைத் தொடும் வாகனத்தின் ஒரே பகுதி. இருப்பினும், பல ஓட்டுநர்கள் அவற்றின் பராமரிப்பு நிலையைப் புறக்கணிக்கிறார்கள். தேய்ந்த ரயர்கள் பிடியை இழக்கின்றன, குறிப்பாக ஈரமான சாலைகளில், சறுக்கல்கள் மற்றும் விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இலங்கையில், கிட்டத்தட்ட 15 வீதமான நெடுஞ்சாலை விபத்துகளில் டயர் செயலிழப்பு காரணியாக இருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

**பிரேக்குகள்: உங்கள் உயிர்காக்கும் அமைப்பு**
வினாடிகளில் பிரேக்குகள் வாழ்க்கை அல்லது மரணத்தைத் தீர்மானிக்கின்றன. பிரேக் ஆயில் கசிவு, தேய்ந்து போன பிரேக் பேட்கள் அல்லது புறக்கணிக்கப்பட்ட சமிக்ஞை ஒலிகள் ஆபத்தானவை. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சரியான பராமரிப்பு அவசியம். வட மாகாணத்தில் அதிகமான ஓட்டுநர்கள் பிரேக் முழுமையாக செயலிழந்த பின்னரே திருத்துநரிடம் செல்கின்றார்கள்.

**விளக்குகள் மற்றும் சிக்னல்கள்**
ஹெட்லைட்கள், டெயில் லைட்கள் மற்றும் சிக்னல் லைட்கள் ஆகியவை சாலையில் நாம் பயன்படுத்தும் மொழி ஆகும். இருப்பினும், இரவில் விளக்குகள் இல்லாமல் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் பயணிப்பதைப் பார்ப்பது சாதாரணமாக காணக்கூடியதாகவுள்ளது. சாலை வெளிச்சம் குறைவாக இருக்கும் யாழ்ப்பாணம் மற்றும் கிராமப்புறங்களில், இது மிகவும் ஆபத்தானது. சிறிய பழுதடைந்த பல்புகளை மாற்றுவது எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றும்.



**வழக்கமான வாகனப் பராமரிப்பின் முக்கியத்துவம்**
ஒரு வாகனம் மனித உடலைப் போன்றது. அதற்கு வழக்கமான சோதனைகள் தேவை. எண்ணெய் மாற்றங்கள், வடிகட்டி மாற்றுதல், பேட்டரி சோதனைகள் மற்றும் இயந்திர ஆய்வுகள் ஆகியவை வாகனங்களை சீராகவும் பாதுகாப்பாகவும் இயங்கவைக்கின்றன. உரிய முறையில் பராமரிப்பதன்மூலம் விபத்துகளைத் தவிர்த்து பல உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

**பாதுகாப்பான பயணங்களை வாகனங்களைப் பரிசோதித்து ஆரம்பியுங்கள்**

ஒவ்வொரு பயணத்திற்கும் முன்பு, ஓட்டுநர்கள் குறைந்தது 10 நிமிட பாதுகாப்பு சோதனையை மேற்கொள்ள வேண்டும்:
* ரயர்கள்: அழுத்தம் மற்றும் வெளியில் தெரியும் சேதம்
* பிரேக்குகள்: தொழிற்படும் தன்மை
* விளக்குகள்: ஹெட்லைட்கள், குறிகாட்டிகள், பிரேக் விளக்குகள் தொழிற்படும் தன்மை
* கண்ணாடிகள் மற்றும் வைப்பர்கள்: சுத்தம் மற்றும் வேலை செய்தல்
* எரிபொருள்: பயணத்திற்கு போதுமானது
* என்ஜின் ஓயில், பிரேக் ஓயில் சரியான அளவு
* குளிர்விக்கும் திரவம் சரியான அளவு

**சமூகப் பொறுப்பு**
பாதுகாப்பான சாலைகள் வீதி சமிக்ஞை ஒழுங்குகளால் மட்டும் பேணப்படவில்லை. அவை அனைவரதும் பொறுப்புகளால் கட்டமைக்கப்படுகின்றன. ஓட்டுநர்கள், உரிமையாளர்கள், திருத்துநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் அனைவரும் பங்களிக்க வேண்டும். சரியான பராமரிப்பு விபத்துகளைக் குறைக்கிறது, விபத்துகளைத் தடுக்கிறது, எரிபொருளைச் சேமிக்கிறது மற்றும் உயிர்களைப் பாதுகாக்கிறது.
**அடுத்தமுறை நீங்கள் உங்கள் வாகனத்தைத் தொடும்போது, எனது வாகனம் இந்தப் பயணத்துக்கு உண்மையிலேயே பாதுகாப்பானதா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.** ■


## பிரம்மஸ்ரீ தி.மயூரகிரி குருக்களின்

# கோயில் சொல்லும் கதை

## ஆன்மிகப் பாதைக்கான அற்புத ஒளி!

■ ஆனையூர்க் கவிராயர்

பிரம்மஶ்ரீ தி.மயூரகிரி குருக்களின் கோயில் சொல்லும் கதை என்னும் இந்நூல் பன்னெடுங்கால ஆன்மிக வழித்தடத்தை இலக்கிய ஒளி பாய்ச்சி வாசக உள்ளங்களில் தெள்ளத்தெளிவாக காண்பியம் செய்கின்றது. இது அவரது இலக்கியப் புலமையையும் பிறப்பியல் ரீதியான இறைபணியின் நிறைமதியையும் மிக ஆழமாகப் புலப்படுத்துகின்றது. இலங்கைத் தேசமெங்கும் அவரது தெய்வீகத் தேடலுணர்வு பல நூற்றாண்டுகள் பின்னோக்கி நகர்ந்து இறை அற்புதங்களையும் பொற்புறு ஆன்மிக சக்திகளையும் அறிவுபூர்வமாக நுகர்ந்து 25 ஆலயங்களினதும் மகிமையை ஓர் இந்துமத நூற்பொக்கிஷமாக எமக்களித்துள்ளமை மகத்தான இறைபணியாகும். சம்பவத் திரட்சிகளைப் பக்திபூர்வ இலக்கியச் செழுமை ததும்பவும் கதைப் பாங்கிலும் பாத்திரப் படைப்புகளுடன் கூடியதாகவும் வெளிப்படுத்தியுள்ளமை படிப்போரை ஒரு பக்திப்பிடிப்புடன் இறை அற்புதம் நிகழ்ந்த அந்தத் தருணங்களுக்கு ஈர்த்துச்செல்கிறது. இந்த அணுகுமுறை அவரது படைப்பாற்றலையும் மதப் பாரம்பரிய வம்சவியல் திறனையும் வெளிக்காட்டுகிறது.




"ஏலம் விடப்பட்ட காணி" என்ற முதலாவது வரலாற்றுப் பதிவில் மதம்சார் இரு அணிகள் உருவகப்படுத்தப்பட்டிருந்தாலும் வேற்றுமை உணர்வை வெளிக்கிளம்பவிடாது ஏலப்பேச்சு நடைபெற்று குறித்த காணி முன்னர் இருந்த அதே தரப்பினரிடம் கைபோகும்படியாக சுகமாக நிறைவுற்றமையையும் இந்துக்கள் அதையிட்டு மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கிக் கொண்டாடிய மதப் பற்றுணர்வையும் நடுநிலை மனதுடன் வெளிப்படுத்திய விதம் அவரது பரந்த விரிவாக்க உள்ளப்பாங்கை படிப்பவர்களுக்கு உணர்த்தும் சொற்கோவிலாக இருந்த பெரிய நாயகர் சிற்ப வேலைகள் நிறைந்த கற்கோவிலில் அமர்ந்தருளப் போகின்றார். என்றவாறான வார்த்தை அழகு அவரது கவிப்புலமைக்குச் சான்றாகும்.

"தண்ணீர் தேடிய மந்திரி" என்ற தலைப்பில் சொல்லப்பட்ட விடயம் அப்போதைய யாழ்ப்பாண இராச்சியத்தை கண்முன் நிறுத்துகிறது. மகாராசா, மந்திரி ஆகியோரின் இலக்கிய ஈடுபாட்டைக் குறிப்பாக மகாமந்திரியின் படைப்பாற்றலை மொழிபெயர்ப்புத் திறனை உரிய கவிதையை வாசக உள்ளங்களுக்குக் காண்பித்து நிரூபணம் செய்கின்றார். உணவு, உறக்கம் பற்றிச் சிந்திக்காது அரச ஆணையை நிறைவேற்ற விழித்திருந்து கவி படைக்கும் மகா மந்திரி இறை அனுக்கிரகம் கிடைக்கப்பெற்ற ஒரு பக்திமான் என்பதை இலகுவான தமிழ்நடையில் எமக்கு உணர்த்த முற்படுகின்றார். அதுமாத்திரமன்றி இறை அற்புதத்தை நேரில் கண்ணுற்று அனுபவித்து அற்புதம் நிகழ்ந்த இடத்திலேயே அரசரின் அனுமதியுடன் ஆலயம் அமைப்பித்து மொழிப்பணியுடன் மதப்பணியையும் ஒருசேர நிறைவேற்றும் யாழ்ப்பாண இராச்சிய மகிமையை இக்கால இந்து தமிழ் அன்பர்களுக்கு முன்னுதாரணப் படுத்துகின்றார். தொடர்ந்து 'அடியார்க்கு அரண்' என்ற தெய்வக்கடாட்சத்தை திவ்வியமாக வெளிப்படுத்தும் பகுதியில் அந்நியரின் மதவெறியையும் எம் மதத்தின்மீது கொண்ட வெறுப்பையும் படம் பிடித்துக் காட்டி அவர்கள் வெறித்தனமாக இந்துக் கோயில்களை இடித்த விதத்தையும் தன் கண்முன்னே தற்போது நடைபெறுவது போல எண்ணி உள்ளம் நொந்து படிப்போரையும் பதறவைக்கின்றது. அதிலும் ஒரு நற்செய்தியாக அடர்ந்த காட்டுப்பகுதியில் இருந்த மண்டூர் முருகன் கோயில் தப்பித்திருந்ததை மனநிறைவுடன் குறிப்பிட்டு வாசகர்களுக்கும் ஒரு நற்செய்தியாக வழங்குகின்றார். ஆனாலும் பறை ஒலி மூலம் காட்டுக்குள்ளே மண்டூர் முருகன் வீற்றிருப்பதை அறிந்து அதனையும் தகர்த்து அழிக்கப் புறப்பட்ட ஒல்லாந்தர் படையைக் குளவிப்படை கொண்டு விரட்டி அடித்த மண்டூர் முருகனின் அற்புத சாகசத்தை தெய்வாம்சமாக வெளிப்படுத்தி வாசகர் மத்தியில் இறை நம்பிக்கையை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் உள்ளுணர்வில் ஊட்டும் விதம் மிகுந்த அவதானத்திற்கும் போற்றுதற்கும் உரியது.

உண்மையில் ஒன்றல்ல இரண்டல்ல 25 இறை அற்புதங்கள் பல நூற்றாண்டுகள் பின்னோக்கி நகர்ந்து தனது இலக்கிய வித்துவத்தை பார்வைப் புலத்தினூடே செலுத்தி பற்பல நூல்கள் மற்றும் வழிவழி தொடரும் வாய்மொழி இதிகாசப் பதிவுகள் முதலான ஆய்வுக்களங்களில் பெரிதும் உழைத்தே நூலாசிரியர் இவ்விடயங்களைத் தொகுத்திருக்கமுடியும். இதுவொன்றும் எளிதான விடயமன்று. இது அவரது மத அனுஸ்டான மனப்பக்குவத்தினூடாகவே சாத்தியப்பட்டிருக்கமுடியும். "ஆங்கிலேயரும் இந்துக்கோயில் அமைத்தார்கள்" என்ற இலகுவான கதையாடல் ஊடாக எமது தமிழ்ப்பெண் தெய்வமான "ஆத்தா மகமாயி" அம்பாளின் புதுமையை நேரில் கண்டு அனுபவித்து மெய்மறந்த ஆங்கிலேயரான தோட்ட முதலாளி அம்பாளுக்கு ஆலயம் அமைத்துக்கொடுத்த விந்தையான விடயத்தை படிப்பவரின் பக்தி உணர்விற்கு உரித்தாக்கம் செய்துள்ளார்.

நிறைவாக "கண்டம் கடந்து பயணிக்கும் ஈழத்துக்கோயில்கள்" என்ற 25ஆவது விடயத் தொகுப்பில் புலம்பெயர்ந்து மேலைநாடுகளில் வசிக்கும் ஈழத்தமிழர்கள் காலம் கடந்தும் ஈழக்கோயில்கள் மீதுள்ள பக்திச் சிரத்தையை மென்மேலும் வளர்த்து மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவதை எளிய உரையாடல்கள்மூலம் வாசகர்களும் புரிந்துகொள்ள வைக்கின்றார். இப்பகுதியின் வடக்கு கிழக்கு பகுதியில் மாத்திரமன்றி தென்பகுதியிலும் பற்பல அற்புதங்கள் புரியும் இந்து ஆலயங்கள் இருப்பதையும் நமது யாழ்ப்பாணத் தமிழ் வார்த்தைகளில் தவழ உரைநடையை வடிவமைத்துள்ளமையூடாக உலகெங்கும் யாழ்ப்பாணத் தமிழ் வாழ்வதையும் தமிழ் மக்களின் மொழி மதப்பற்றினையும் இயல்பூக்கமாக வெளிப்படுத்துகின்றார் நூலாசியர். எத்தனையோ நூல்களிலும் ஏட்டுச்சுவடுகளிலும் கர்ன பரம்பரைக் கதையைப் போலவும் இருக்கக்கூடிய விடயங்களைச் சேகரித்து இப்படி ஒரு இந்து வரலாற்று நூலைப் படைத்தமை நூலாசிரியரின் தமிழ் இலக்கிய இந்து சமயப் பணியின் மகோன்னத வெளிப்பாடாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரத்தில் மீட்சிக்கான பாதை

பகுதி: IV



**பூங்கோதை இரத்தினவடிவேல்,**
பிரதிப் பணிப்பாளர்,
தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

மக்களின் நம்பிக்கை நலிவடைந்து சீர்திருத்தம் என்றாலே சமமின்மை மற்றும் ஊழலை விளைவிக்கும் என்ற கருத்து ஏற்பட்டுள்ளது என்றும் திடமற்ற அடித்தளத்தில் ஓர் செயற்றிறனான சந்தைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பமுடியாது என்றும் பேராசிரியர் அபேரத்ன வலியுறுத்தினார். சமூகப் பாதுகாப்பு வலைகள் தொடர்பில் அவர் வறுமை என்பது ஓர் தொடர்ச்சியான மற்றும் அபிவிருத்தி சார்ந்த பரிணாமம் என்பதிலிருந்து நெருக்கடியால் ஏற்பட்ட பெருமளவிலான வறுமையாக மாற்றம் பெற்று நடுத்தர வருமான குடியிருப்புகளையும்கூட பாதிக்கும் விடயமாக மாறியுள்ளது என்று அவர் விளக்கினார். அஸ்வெசும பொறிமுறைக்கு ஆதரவைத் தெரிவித்தபோதிலும் இவ்வகையிலான பணமாற்றல்கள் ஓர் தற்காலிக நிவாரணத்தை மட்டும் வழங்கும் என்றும் பொருளாதார வளர்ச்சியே வறுமைக்கான உண்மையான தீர்வு என்றும் அவர் குறிப்பிட்டார்.

**சீர்திருத்தங்கள் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன?**

'நெருக்கடியின் பாடங்களை நெறிமுறையாக மாற்றவேண்டும். சர்வதேச நாணயநிதியத்துடனான இறுதி நிகழ்ச்சித்திட்டமாக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற வேளையில், இந்த இலக்கை எய்துவதற்கு சீர்திருத்தங்கள் எவ்வகையில் நிறுவனமயமாக்கப்படுகின்றன?' என்று கலாநிதி அமரசேகர வினவினார்.

கிரமமான செயலாற்ற மீளாய்வுகள், டிஜிற்றல்மயப்படுத்தல் மற்றும் திறைசேரியுடனான ஒருங்கிணைப்பு என்பவற்றினூடாக பிரதான அரச வருமான சேகரிப்பாளர்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம் மற்றும் இலங்கை மதுவரித் திணைக்களம் என்பவை தற்போது வலுப்படுத்தப்படுகின்றன என்று சிறிவர்த்தன தெரிவித்தார். அத்துடன் முக்கியமான செயலாற்றக் குறிகாட்டிகள், இலத்திரனியல் கோப்பு முறைமை மற்றும் சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்க முறைமை என்பவற்றினூடாக வெளிப்படைத் தன்மை மேம்படுத்தப்படுவதுடன், மனித தலையீடு மற்றும் ஊழலைக் குறைப்பதற்கும் இவை உதவுகிறது என்று கூறினார்.

இறைவிதிகள் மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மை பொறிமுறைகளை அறிமுகஞ்செய்யும் அண்மையில் சட்டமாக்கப்பட்ட பொதுநிதி முகாமைத்துவச் சட்டம் ஓர் முக்கியமான கட்டமைப்புரீதியான சீர்திருத்தமென அவர் குறிப்பிட்டார். இத்துடன், இறைத்துறை மீதான மேற்பார்வையை மத்தியமயமாக்குவதற்கும் நெறிமுறைப்படுத்துவதற்கும் ஓர் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமும் நிறுவப்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும், சீர்திருத்தம் என்பது ஒரே தடவையில் மேற்கொள்ளப்படும் ஓர் விடயமல்லவென்றும் பல கடினமான சீர்திருத்தங்களை முன்னரே நடைமுறைப்படுத்தியதால், இவற்றை மேலும் வலுப்படுத்தி முனனோக்கிக் கொண்டு செல்லவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

**இலங்கையின் பொருளாதார மீட்சி நேர் விளைவுகளின் பிரதிபலிப்பு!**

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து ஓர் திடமான மீட்சியை நோக்கிய இலங்கையின் பயணம் ஒரு எச்சரிக்கைக் கதையாக அமைந்தாலும் இது தீர்க்கமான கொள்கை நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய நேர்கணியமான விளைவுகளின் சான்றையும் பிரதிபலிக்கிறது. சர்வதேச நாணயநிதியத்துடனான முன்னைய நிகழ்ச்சித்திட்டங்களைப் போலல்லாமல், இந்தத்திட்டம் ஆளுகைச் சீர்திருத்தங்கள், நிறுவன வலுப்படுத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்புமீது அதிக கவனம்செலுத்தி முழுமையான முறையில் பொருளாதாரத்தை நிலைபேறான முறையில் கட்டியெழுப்பும் நோக்குடனானதாக அமைந்துள்ளது. இதன் பிரதிபலிப்பாகவே தற்போதைய மீட்சி காணப்படுகின்றது. இருப்பினும், நெருக்கடியிலிருந்து வெளியேறினாலும், பொருளாதாரத்தின் இயலாற்றலை வலுப் படுத்தி நிலைபேறான வளர்ச்சிப்பாதையை உருவாக்கவேண்டும். அத்துடன் பகிரப்பட்ட தியாகத்தின்மூலம் உருவாக்கப்பட்ட சமூக ஒப்பந்தம் மதிக்கப்பட வேண்டும். பொருளாதாரச் சீராக்கத்தினால் பல தரப்பிலும் ஏற்பட்ட சுமையை சுமக்கும் குடிமக்களுக்கு வெளிப்படைத்தன்மை அவசியமாகும். தற்போது காணப்படும் மீட்சிப்பயணத்திற்கான அடித்தளம் கடந்த இரு ஆண்டுகளாக நாட்டப்பட்டிருந்தாலும், நிலையான சுபீட்சமானது சீர்திருத்தங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதிலேயே தங்கியுள்ளது.

(மிகுதி அடுத்தவாரம்)



# புனிதமும்,மகிமையும் நிறைந்த ஆவணிச் சதுர்த்தி

■ மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

எல்லாம் வல்ல ஸ்ரீ விநாயகப் பெருமானை நினைத்து அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் ஆவணிச் சதுர்த்தி மிக முக்கியமானது. புனிதமும், மகிமையும் வாய்ந்த விரதமாகும். ஆவணிச் சதுர்த்தி என்பது ஆவணி மாதத்து சுக்கிர பட்சத்தில் வரும் சதுர்த்தியிலே வளர்பிறை நான்காம் நாள் அனுஷ்டிக்கப்படும் விரதம் ஆகும். தமிழ் மக்கள் தமிழ் வருடத்தில் முதல் மாதமான சித்திரை மாதத்தில் வரும் புதுவருடப்பிறப்பை விசேஷமாகக் கொண்டாடினாலும் தமிழ் வருடத்தின் ஐந்தாவது மாதமான ஆவணியையே ஆண்டின் முதல் பண்டிகையாக நினைத்து மிக கோலாகலமாகக் கொண்டாடுவார்கள்.

**விநாயகருக்குரிய சிறப்பு விரதம்**

ஆவணிச் சதுர்த்தி விரதங்களுக்குரியது திருவருளே திருமேனியாக உள்ளவர் விநாயகர். சர்வ வல்லவரான சிவபெருமானிடம் இருந்து முதல் முதலாக எழுந்த ஒளியான "ஓம்" என்னும் வரி வடிவமே விநாயகப்பெருமானின் திருவடிவம். யானை முகம் பிரணவ வடிவினன் என்றும் மூன்று கண்கள் சூரிய,சந்திர, அக்கினிகளையும் ஐந்து கரங்கள் பஞ்ச கிருத்தியங்களைச் செய்பவர் என்பதனையும் இரு விசாலமான செவிகளும் ஆன்மாக்களை மலவாதனை தாக்காது காத்து வினை வெப்பத்தைப் போக்கியருளும் என்றும் இரு குறுகிய வடிவிலமைந்த திருவடிகளையும் தொந்தி வயிறு எல்லா அண்டங்களும், உயிர்களும் தன்னில் அடக்கம் என்று தன்னில் உணர்த்துகின்றன. விநாயகரின் வாகனம் மூஷிகம் எனப்படும் பெருச்சாளியாகும்.

**விரத மகத்துவம்**

இத்திருநாள் அன்று காலைக்கடனை முடித்துவிட்டு நீராடி களிமண்ணினால் விநாயகர் திருவுருவைச் செய்தல் வேண்டும். விநாயகரது திருவுருவை மஞ்சள் மாவிலோ பசும் சாணத்திலோ அரைத்த சந்தனத்திலோ குமிழாக பிடித்து வைத்துக் கொள்ளலாம். வீட்டையும் நன்றாக தூய்மை செய்து கோலமிட்டு மாவிலை தோரணம் கொண்டு அலங்கரித்தல் வேண்டும். தூய்மையான பலகைமீது கோலமிட்டு அதன்மீது தலைவாழையிலை நுனி வடக்கு நோக்கியிருக்கும்படி விரித்து அறுகம்புல் ஆசனம் அமைத்துவிநாயகரை வைத்தல் வேண்டும்.

பல வர்ணக் கடதாசியினால் அமைத்த குடையையும் விநாயகருக்கு அமைத்து தொந்திக் கொப்பூழிலில் நாணயம் வைத்துத் திருநூறு, சந்தனம் குங்குமம் , ஒற்றைப்பூணூல் அணிவித்து எருக்கலம் பூ மாலை, அறுகம்புல் மாலை சார்த்தல் வேண்டும் அத்துடன் இளநீர் தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பலாப்பழம், மோதகம், கொழுக்கட்டை, அப்பம், அவல், பொரி, பால், வெல்லம், தேன் ஆகியவற்றை நெய்வேத்தியப் பொருள்களாகப் படைத்தல் வேண்டும்.

அறுகம்புல், செம்பருத்தி பூ, சங்குப் பூ போன்ற மலர்களைக் கொண்டு பூஜித்தல் வேண்டும். தூபமிட்டு, விநாயகர் அகவல், விநாயகர் அஷ்டகம் என்பவற்றைப் பாடி தீபாராதணை செய்து வணங்குதல் வேண்டும். அன்று மாலை அல்லது மூன்றாம் நாள் விநாயகருக்கு புனர்பூஜை செய்து அவ்விநாயகரை ஆறு, குளம், ஏரி போன்ற நீர் நிலைகளில் கரைப்பர். பூத கணங்களின் தலைவர் விநாயகரைத் தண்ணீரில் கரைப்பது என்பது பூதங்களில் ஐக்கியப்படுவதைக் குறிக்கின்றது. சதுர்த்தியன்று உணவைக் குறைத்து இளநீர் மட்டுமே அருந்தலாம் இப்படிச் சதுர்த்தி விரதமிருப்பதால் விநாயகரின் அருள் பரிபூரணமாகக் கிடைக்கின்றது. இவ்விரதத்தின் சிறப்புப் பற்றி இமய மலையரசன் இம்வான் தனது மகளாகப் பிறந்த உமாதேவியாருக்கு எடுத்துரைப்பதிலிருந்து நன்கு அறியமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலரினும் மென்மையை தண்டித்தல் தகாது!

■ திருமதி தவமணிதேவி கணேசலிங்கம்
மூதாளர் அன்பு இல்லம்

முதியோர் வாழ்க்கை நரகமாகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நாட்டில் கருணை உள்ளம் படைத்தவர்களால் முதியோர் இல்லங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட முதியோர்கள் 600 இற்கு மேற்பட்ட முதியோர் இல்லங்களில் வாழ்கின்றனர் என்று அண்மைக்கால புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மலரைவிட மென்மையானது குழந்தைகளின் மனம். எனவே அதனைக் கசக்கி விடாதீர்கள் என்று பெரியோர்கள் சொல்வார்கள். முதியவர்களும் அவ்வாறானவர்கள்தான். எனவே அவர்களின் மனமும் புண்படாமல் நடந்துகொள்வது அவசியம். முதுமைக்குச் சரியான வரைவிலக்கணம் கூறுவது கடினம். நோய் காரணமாக குறைந்த வயதிலும் முதுமை போன்ற உடல்வாகு சிலருக்கு அமைந்துவிடுகிறது. உண்மையில் அவர்கள் முதியவர்கள் அல்லர். நோயின் தாக்கமே மற்றவர்களின் கண்ணுக்கு அப்படித் தெரியவைக்கிறது. குடிப்பழக்கம் உள்ளவர்களும் இதில் அடங்குவர். பெரும்பாலும் அறுபது வயதினை ஓய்வுபெறும் வயதாக அரசாங்கம் அறிவிக்கிறது. அக்கால கட்டத்திலிருந்து அவர்கள் 'முதியவர்கள்' என்ற அடைமொழிக்குள் அடங்கிவிடுகிறார்கள். மேலை நாடுகளில் முதுமையின் வயதெல்லை நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 60 தொடக்கம் 64 வயதில் மூத்தவர். 65 தொடக்கம் 74 இளைய முதுமை. 75 தொடக்கம் 85 நடுத்தர முதுமை. 85 வயதுக்கு மேல் மிக முதுமை என்பதாகும்.

### மூத்தோரைப் பேணுதல் கட்டாயக் கடமையே

எமது நாட்டில் புதிய திட்டங்களை உருவாக்குவதில் அனுபவசாலிகளான முதியவர்களை ஈடுபடுத்தப்படுவதை நாம் அறிவோம். அவர்கள் தாம் முன்னர் பெற்றிருந்த கல்வி அறிவோடு உயர்பதவி வகித்த காலத்தில் பெற்ற அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வதால் வீட்டுக்கும் நாட்டுக்கும் பேருதவி புரிந்தவராகிறார்கள். அனுபவம்தான் சிறந்த ஆசான்! முதியோர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் உணவு. உடை. உறையுள். மருத்துவம். பொழுதுபோக்கு. அரவணைப்பு ஆகியனவாகும். இதில் ஒன்று குறைந்தாலும் அவர்களின் மனநிலை மாறுபடும். பிள்ளைகளின் வீட்டில் இருப்பதைத்தான் முதியவர்கள் விரும்புவார்கள். வேண்டிய உணவும். உடையும். மருந்தும் தங்கள் பிள்ளைகள் தமக்குத் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் இருப்பார்கள். சில இடங்களில் இவ்விடயம் திருப்திகரமானதாக இருக்கிறது. பெற்ற பிள்ளைகளுடன் இருக்கும் முதியோரின் மனநிலை திருப்தியாக இருக்கும். சிலவேளைகளில் தொழிலின் நிமித்தம் பிள்ளைகள் வேறு இடம் சென்றுவரும் வேளையிலே அந்த முதியவர்கள் வீட்டிலே பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பர். பேரப்பிள்ளைகள் இல்லாத வீடுகளில் வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஆன்மிகப் புத்தகம் வாசித்தல், கோவில்களுக்குச் செல்லுதல், தேவாரப் பதிகங்கள் பாடி இறைவனைத் துதித்தல், தியானம், யோகா போன்றவற்றில் காலத்தைக் கழிப்பர். சிலர் கவிதை, கட்டுரை என்பவற்றை எழுதுவதில் காலத்தைக் கழிப்பர். பிள்ளைகள் வேலைமுடிந்து வீட்டுக்கு வந்ததும் முதியவர்களின் முகத்திலே ஆனந்தம் தெரியும். நோயுற்ற வேளையிலும் தங்கள் பிள்ளைகள் பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் நிம்மதியாக உறக்கம் கொள்வார்கள்.

### முதியோரின் வாழ்வில் வசந்தம் வேண்டும்

பிள்ளைகள் இல்லாத முதியவர்கள் அல்லது பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியவர்களின் மனநிலை சற்று மாறுபட்டதாகவே அமையும். சிலவேளைகளில் போதிய பராமரிப்புக்குரிய வழிவசதியோ வாய்ப்போ கிடைக்காத பட்சத்தில் பெரிதும் மனவிரக்தி அடைகிறார்கள். கடவுளை மனம் நோகிறார்கள். சிலர் ஆலய மடங்களுக்குச் சென்றால் அமைதி கிடைக்கும் என்று அங்கே சென்று தங்கிவிடுகிறார்கள். தற்காலத்தில் இந்த நிலையிலிருக்கும் முதியோர்களைப் பாதுகாப்பதற்காகவே முதியோர் இல்லங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. நிலைமையை உணர்ந்து செயற்படும் கிராம அலுவலர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்களின் அனுசரனையுடன் இப்படிப்பட்ட முதியோர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்துவிடுகிறார்கள். முதியோர் இல்லங்களில் அவர்களுக்கு வேண்டிய வசதிகளும் உதவிகளும் கிடைக்கின்றன.

முதியோர்களின் சகல தேவைகளும் இலவசமாகவே பூர்த்திசெய்யப்படுகின்றன. மருத்துவச் செலவு மற்றும் இறுதிச்சடங்குச் செலவு எல்லாவற்றையும் முதியோர் இல்லங்களே பொறுப்பேற்றுக் கொள்கின்றன. வடமாகாணத்திலே கைதடியில் மட்டுமே ஒரேயொரு அரசினர் முதியோர் இல்லம் காணப்படுகிறது. இங்கு பணம் எதுவும் அறவிடப்படுவதில்லை ஆயுள்வேத வைத்தியம், ஆங்கில வைத்தியம், பொழுதுபோக்கான திரைப்படம், வாசிப்புக்குரிய புத்தகங்கள் யாவுமே இலவசமாகவே கிடைக்கும். முதியோரில் சிலருக்கு வாசிப்புப்பழக்கம் உண்டு. வாழ்நாள் முழுவதுமே ஏதாவது படித்துக்கொண்டும் வாசித்துக்கொண்டும் இருத்தல் நன்மை பயக்கும்.



சிலர் இயற்கையை இரசிப்பதில், நேசிப்பதில் ஆர்வம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். பூஞ்செடிகள் மற்றும் பழமரங்கள் நாட்டி அவற்றின் பலனைப் பெறமுடியாவிட்டாலும் தமது வருங்கால சந்ததிக்காகச் செய்துவைக்க விழைகிறார்கள். மேலும், நாடறிந்த பெரியோர்கள் பலர் எழுபது வயதிற்கும் மேற்பட்ட காலத்தில்தான் பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். ஆகவே முதியோர்களின் வாழ்வு இறைவனின் ஆழ்ந்த பக்தியுடனும் நம்பிக்கையுடனும் அமைதியாகவும் நிம்மதியாகவும் இருக்க வேண்டும். அதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பது அனைவருடைய கடமையுமாகும்.






# பச்சிலைப்பள்ளி பிரதேச பண்பாட்டுப் பெருவிழா!

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசெயலகப் பண்பாட்டுப் பெருவிழா அண்மையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம், பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த விழா இனிதே நடைபெற்றது.

சிவ நடனம், கிராமிய நடனம் , நாடகம், இசை இன்பம், சாஸ்திரிய நடன சங்கமம், வாத்திய இசைச் சங்கமம் என்பன விழாவுக்கு அணிசெய்தன.

அத்துடன், விருது வழங்கலும் சாதனையாளர்கள் கௌரவிப்பும் விழாவின் மற்றொரு பகுதியாக இடம்பெற்றன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைத் தவிசாளர் சு.சுரேன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் கி.மாலினி, பளை தொழிலதிபர் ந.காந்தரூபன், பளை ஒப்பனைக் கலைஞர் கலாபூஷணம் செ.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு விழாவுக்குப் பெருமை சேர்த்தனர்.

புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
● கட்டுரைகள்
● கவிதைகள்
● விமர்சனங்கள்
● நூல் அறிமுகம்
● பதிவுகள்
● அறிவியல்
● கலைப்படைப்புகள்
அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துஐயன்கட்டு இளைஞன் சாவு; கைதான படையினருக்குப் பிணை!

முல்லைத்தீவு, ஓக.27
முல்லைத்தீவு முத்துஐயன்கட்டுப் பகுதியில் இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்த நான்குஇராணுவத்தினரும்கடும்நிபந்தனையில்பிணையில்விடுவிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த7ஆம்திகதிமுத்துஐயன்கட்டுப் பகுதியில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான்பொலிஸ்நிலையத்தினரால்நீதிமன்றில்வழக்குப்பதிவுசெய்யப்பட்டது.
இந்த வழக்கு விசாரணை கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான்நீதிமன்றில்எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த வழக்கு 26ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டது.
இந்தநிலையில் இந்த வழக்கு நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் த. பிரதீபன் தலைமையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட இராணுவத்தினருக்கான பிணைக் கோரிக்கை இராணுவத்தரப்புச் சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட நிலையில் கடும்நிபந்தனைகளின் பின்னர் குறித்த நான்கு இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
இவர்கள்சாட்சியங்களைஅச்சுறுத்தக் கூடாது என்றும் நீதிமன்ற அனுமதியின்றிவெளிநாட்டுப்பயணங்கள்செல்லமுடியாது என்றும்மன்று அறிவித்துடன் வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (ச-19-35)

## குருதிவாந்தி...

முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.
அராலி மத்தி., வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த தெ.கோபாலசாமி (வயது-39) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கடந்த 24ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள உறவினரின் வீட்டுக்குச் சென்றபோது அவர் குருதி வாந்தி எடுத்துள்ளார். இதையடுத்து, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குமாற்றப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ரணிலுக்குப்...

தனது மனைவி மைத்திரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்கு அரச நிதியைப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு ரணில் மீது முன்வைக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கடந்த வெள்ளிக்கிழமை அவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியது.
அன்றையதினம் இரவு 10.15 மணிவரை இடம்பெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து ரணில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இதற்கிடையே உடல் நிலை மோசமடைந்ததால் ரணில் வெலிக்கடைச் சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.
வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது ரணில் முன்னிலையாகவில்லை. இதனால், அவரை சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னிலையாகுமாறு நீதவான் உத்தரவிட்டார். விசாரணைகளின்போது, ரணிலுக்கு பிணை வழங்கக்கூடாது என்றும் வழக்கு முடியும் வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டும் என்றும் சட்டமா திணைக்களத்தினர் வாதாடினார்கள்.
எனினும் ரணிலுக்கு பிணை வழங்க வேண்டியதன் அவசியத்தை முன்வைத்து சட்டத்தரணிகள் குழு நீண்ட சமர்ப்பணம் செய்தது. சுமார் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக இடம்பெற்ற இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் முன்னாள் ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்கியது.
வழக்கு ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-ம)

## ரணிலைக்...

ரணிலின் விடுதலையை வலியுறுத்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுங்கமைப்பில் கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு அருகாக நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது. 'அநுரவே வீட்டுக்குச் செல்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின் போதே, ரணிலுக்கு நீதி வழங்கும் வகையில் இந்த விடயத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலையிடவேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம)

## சட்டத்துக்கு...

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-
அனைத்து குடிமக்கள் மீதும் சட்டம் சமமாகப் பிரயோகிக்கப்படும். ஊழல்களிலும், மோசடியிலும் ஈடுபட்ட எவராக இருந்தாலும் அவர்கள் கடுமையான தண்டனையை எதிர்கொள்வார்கள்.
பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கும் நீதியை உறுதிசெய்வதற்கும் பரந்த முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது. இந்த நடவடிக்கைகளில் நாங்கள் எப்போதும் எவருக்காகவும் சமரசங்களைச் செய்து கொள்ளப்போவதில்லை.
செப்ரெம்பர் மாதம் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டதும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட அனைத்து அரச மாளிகைகளும் அரசாங்கத்தால் திரும்பப் பெறப்படும். இந்த விடயத்திலும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் - என்றார். (அ-ம)

## மருத்துவக்...

வப் பரிசோதனைகளின் அடிப்படையில் முறையான மருத்துவ அறிக்கை நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.
அதில் இதயத்துக்கான மூன்று வால்வுகளில் அடைப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று முழுமையாக அடைபட்டுள்ளது. ஏனைய இரண்டும் பகுதியளவில் அடைபட்டுள்ளன. இதயத்துக்கு மிகவும் அண்மித்த பகுதியில் இந்த அடைப்புகள் ஏற்பட்டுள்ளதால், சத்திரசிகிச்சை செய்யமுடியாது.
அத்துடன், உடலில் இதய திசுக்களின் இறப்பு, சிறுநீரக நோய், அதிக ஆபத்துள்ள நீரிழிவு நோய், சோடியத்தின் இருப்பிழப்பு, உயர் குருதி அழுத்தம் ஆகிய நோய்களும் ரணிலுக்கு இருப்பதாகக் கூறப்பட்டது. இவற்றின் அடிப்படையிலேயே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
இந்த வழக்கில் ரணிலுக்கு ஆதரவாக 300க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## நெல்லியடியில்...

இருந்து வந்திருந்த நபரொருவரிடம் இருந்து, வெளிநாட்டு நாணயத்தாள்கள் உள்ளடங்கலாக ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாவரை அண்மையில் திருடப்பட்டன.
இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையிலேயே, சந்தேகநபர்களாக பத்துப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.
சந்தேகநபர்களிடம் இருந்து ஒரு தொகைப் பணம் மீட்கப்பட்டதுடன், எஞ்சிய பணத்தை மீட்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## வரதராஜப்...

மகோற்சவப் பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தேர்த் திருவிழா கிருஷ்ண ஜெயந்தியான எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமையும், தீர்த்தம் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதியான ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## சுண்டிக்குளம்...

புத்தளம் உடப்புப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சசிதரன் (வயது-25) என்ற மீனவரே இவ்வாறு உயிரிழந்தார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-
சீரற்ற காலநிலை காரணமாக வடமராட்சி கிழக்கு கடற்கரைப் பகுதியில் கடற்கொந்தளிப்புக் காணப்படுகின்றது. நேற்று அங்கு கரைவலைத் தொழில் இடம்பெற்றுள்ளது. இதன் போதே படகொன்று கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது என்றும், அந்தப் படகில் இருந்த மீனவர் படகு மோதியதால் உயிரிழந்தார் எனவும் பொலிஸாரின் விசாரணைகளில் கூறப்பட்டுள்ளது.
சடலம் மரண விசாரணைக்காகவும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகவும் நித்தியவெட்டை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-100-316-26-66)

## செம்மணி...

நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு அகழ்வெல்லை விரிவாக்கம் செய்யப்பட்டிருந்தது. நேற்றைய அகழ்வுப் பணிகளின்போதே, மேலும் 16 என்புத்தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. அவற்றின் மீதான தொடர்ச்சியான அகழ்வு நடவடிக்கைகள் பேராசிரியர் ராஜ்சோமதேவ குழுவினரால் இன்று மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-ம-26)

## ஆடையைப்...

செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வுப்பணிகளின்போது ஆடையைப் போன்ற துணியொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அது தொடர்பான மேலதிக அகழ்வு நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ம-26)

## தீவகப்...

1990ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எண்பதுக்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் இராணுவத்தால் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.
அவர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டு, சடலங்கள் மண்டைதீவு பகுதியில் உள்ள சில கைவிடப்பட்ட கிணறுகளில் வீசப்பட்டன. இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் 35ஆவது ஆண்டு நினைவேந்தலே நேற்று முன்னெடுக்கப்பட்டது.
இராணுவத்தால் தீவகத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு வாழும் சாட்சிகள் உள்ளனர் என்றும், அவர்களின் தகவலுக்கு அமைய அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் வேலணை பிரதேச சபையில் அண்மையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னிய மன்னனுக்கு வவுனியாவில் நினைவேந்தல்

வவுனியா, ஓக.27

பண்டாரவன்னிய மன்னன் முல்லைத்தீவுக் கோட்டையை ஆங்கிலேயர்களிடம் இருந்து கைப்பற்றிய வெற்றிநாள் ஞாபகார்த்த நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

அங்குள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவுப்பேருரையை சு.ஜெயச்சந்திரன் வழங்கினார். கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. மாநகர முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாவட்டச் செயலர் பி.எ.சரத்சந்திர, மேலதிக செயலர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன், மாநகரத் துணைமுதல்வர் ப.கார்த்தீபன், ஆணையாளர் பொ.வாகீசன், மாநகர சபையின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-25,110)





# வரவேற்பு நிகழ்வு

கிளிநொச்சி, ஓக.27

கிளிநொச்சி ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையத்தின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையத்தின் அதிபர் தர்மநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிற்கல்வி பிரதியமைச்சர் நளின் ஹேவகே கலந்துகொண்டார். குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ச-113)


## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப் பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்புகளுக்கு: 076 3249 977
077 4121 100

(CS 59178) A

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து வழங்கப்பட மாட்டாது. ஏக்கர் 13 இலட்சம்.

தொடர்பு : Whatsapp : 0044 740 537 3526

(CS 59217) E




வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அடியவர்களின் அரோகரா கோஷங்களுக்கு மத்தியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. திருவிழா பன்னிரெண்டு தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ளது. (எ-41-66)

முன்னாள் ஜனாதிபதிகளின்

# சலுகை இரத்துக்கு எதிரான மனுக்கள் விசாரணையில்

கொழும்பு, ஓக.27

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை இரத்துச் செய்வதற்காக அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டவரைவைச் சவாலுக்குட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் நேற்று உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களான அச்சல வெங்கப்புலி மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய அமர்வின் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சட்டவரைவின் சில சரத்துக்கள் அரசமைப்பை மீறுகின்றன என்றும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பொதுசன வாக்கெடுப்புக்கும் விடவேண்டும் என மனுதாரர்கள் கோரியுள்ளனர். இந்தச் சட்டவரைவுக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளர் ரேணுக பெரேரா, சப்ரகமுவப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் மகிந்த பத்திரன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே உள்ளிட்டோர் 6 மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (எ-இ)

சங்கீதம் 116:15 கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.

## மரண அறிவித்தல்

மண்ணில் 31 . 01 . 1951



மகிமையில் 25 . 08 . 2025

### வண. யோசுவா தயானந்தன் வில்லியம்

**(போதகர், சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், எபிநேசர் இல்லம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட போதகர் யோசுவா தயானந்தன் வில்லியம் அவர்கள் கடந்த 25.08.2025 திங்கட்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான போதகர் தேவதாசன் மனுவல் - மில்லி பத்மராணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசநாயகம் - இராசலட்சுமியின் அன்பு மருமகனும் பூரணசாந்தியின் அன்புக் கணவரும் ஜெரோம் (கணக்காளர் - சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்), ஜொய்சி (அவுஸ்திரேலியா) பாலியோ (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சிகா, ஜக்சன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் ஒளிவியா, ஒளிஷியா, யோவன்னா, ஜெஷிக்கா, யோவேல் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற மானி மற்றும் ஜொலி (நாவலப்பிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான இந்திராணி, மகேந்திரராசா மற்றும் இராமச்சந்திரன், உஷா, ராஜ்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் உடல் இன்று (27.08.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிவரை பார்வைக்காக அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு, தொடர்ந்து இறுதி நல்லடக்க ஆராதனைக்காக யாழ்ப்பாணம் சீயோன் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு ஆராதனை நடைபெற்று அதனைத்தொடர்ந்து மணியந்தோட்டம் சீயோன் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
ஜெறோம் (யாழ்ப்பாணம்) - +94 777729397
பாலியோ (கனடா) - +1 6476562275

தகவல்: குடும்பத்தினர்

(CS/59239) J-1


## வேலையாள் தேவை

கொழும்பில் இயங்கும் பிரபல புடவையகம் ஒன்றிற்கு ஆண் வேலையாள் தேவை.
தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 539 6262

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் கட்டட வேலைக்கு மேசன், கூலியாட்கள் தேவை.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

Tecora Construction (Pvt) Ltd
Everythinghere.lk
076 831 0115

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோவில் வீதியில், பொஸ்கோ முன்பள்ளிக்கும் கைலாயப் பிள்ளையார் கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் 1 1/2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

விலை - 6 கோடி
(பேசித்தீர்மானிக்கலாம்)

தொடர்புகளுக்கு:-
071 068 0538

(CS/59230) J-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org